Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

இலவசப் பிரதி

பக்கங்கள் -12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆவணி-10 | 26-08-2004 | வியாழக்கிழமை | ஓசை -190




# புலிகளின் பகுதிக்குள் ராணுவம் பிரவேசிப்பின்

# யுத்தநிறுத்தம் முடிவிற்கு வந்துவிடும்!

## அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)

**விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அரசாங்கத்தால் இராணுவம் அனுப்பப்படுமானால் எங்களைப் பொறுத்தவரையில் அந்தக்கணத்தில் இருந்தே யுத்தநிறுத்த உடன்பாடு இல்லாமல் போகும் என அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்தார்.**

நேற்று கண்காணிப்புக்குழுத் தலைவருடன் நடந்த சந்திப்பின் பின் ஊடகவியலாளரிடம் பேசிய போது இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் இதில் தெரிவிக்கையில்;

கேள்வி:- கண்காணிப்புக் குழுத் தலைவருடனான சந்திப்பின் நோக்கம் என்ன?

பதில்:- கண்காணிப்புக் குழுத் தலைவருடனான சந்திப்பில் தற்போது யுத்தநிறுத்த நடைமுறைகளைப் பேணுவது சம்பந்தமாகவும் தற்போது ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடி நிலைமைகள் தொடர்பாகவும் விரிவாக ஆராய்ந்து இருக்கின்றோம்.

எமது தலைமைப்பீடத்தின் நிலைப்பாடுகளை அவருக்கு தெளி (12 ஆம் பக்கம் பார்க்க)



# முக்கியவிடயமாக கிழக்கின் நிலைமை நேற்றைய சந்திப்பில் ஆராயப்பட்டது!

### -கண்காணிப்புக்குழுத் தலைவர் ஹொவ்டே

நேற்றைய சந்திப்பில் கிழக்கில் தொடர்கின்ற நிலை பற்றிய முக்கிய விடயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டன. அநேகமாக கிழக்கில் நடைபெற்ற கொலைகள் தொடர்பாக ஆராயப்பட்டது என போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ரொண்புறூவ் ஹொவ்டே தெரிவித்தார்.

நேற்று அரசியல் துறைப் பொறுப்பாளருடனான சந்திப்பின் பின்னர் அவர் செய்தியாளர் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்;

சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்வதற்குத் தேவையான கள நிலைமைகளைத் தயார் செய்வதற்கு நாம் ஏதாவது செய்தாக வேண்டும். இது தொடர்பாக நான் கூறியவற்றை தமிழ்ச்செல்வன் ஏற்றுக்கொண்டுள்ளார்.

கிழக்கில் உள்ள இருதரப்பினரிடையேயும் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கு தேவையான முயற்சிகளுக்கு அவர் ஆதரவு தெரிவித்திருக்கிறார்.

அதனைச் செய்வதற்குரிய ஒரு வழிமுறையைக் காணலாம் என நான் நம்புகிறேன். அண்மைக்காலங்களில் கிழக்கில் இடம்பெற்று வரும் கொலைச்சம்பவங்கள் தொடர்ந்தும் இடம்பெறாமல் இருப்பதற்கு ஏதாவது செய்தாகவேண்டும். இது குறித்தும் நாங்கள் இந்தச் சந்திப்பின் போது கலந்து பேசினோம் என்றார் சர்வதேச போர்நிறுத்தக்கண்காணிப்புக்குழுவின் தலைவர் ரொண்புறூவ் ஹொவ்டே.

# யாழ்.அமெரிக்க உதவித் திட்டங்களை தூதரக பொறுப்பதிகாரி பார்வையிட்டார்

அமெரிக்க அரசாங்கத்தின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட மூன்று வெவ்வேறான நிகழ்ச்சித் திட்டங்களை இலங்கைக்கான அமெரிக்க தூதுவராலயத்தின் பொறுப்பதிகாரி ஜேம்ஸ் என்ட்வில்ஸ் நேற்று யாழ். குடாநாட்டிற்கு விஜயம் செய்து பார்வையிட்டுள்ளார்.

சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவர் நிலையத்தின் ஏற்பாட்டில் மூளாய்கூட்டுறவு வைத்தியசாலையில் சீரமைக்கப்பட்ட கட்டடத்தை அவர் பார்வையிட்டதுடன், கர்ப்பிணிப்பெண்களுக்கான வைத்திய சிகிச்சை உபகரணங்களின் ஒரு தொகுதியினையும் கையளித்தார்.

பின்னர் சண்டிலிப்பாய் பகுதிக்கு விஜயம் செய்த அவர் வலிகாமம் வடக்கின் அதியுயர் பாதுகாப்பு வலயம் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் குடியமர்த்தப்பட்டுள்ள நலன்புரி நிலையங்களிற்கு நேரில் விஜயம் செய்து பார்வையிட்டார். சுமார் 2 மில்லியன் ரூபாநிதி ஒதுக்கீட்டில் இந்நலன்புரி நிலையங்களிற்கு யு.எஸ்.எயிட் அமைப்பினால் குடிநீர் வசதியும், மலசலகூட வசதியும் ஏற்படுத்தி வழங்கப்பட்டுள்ளதுடன், இங்கு வாழும் 450 இற்கும் அதிகமான குடும்பங்கள் நலன்பெறும் வகையில் வீடமைப்பு திட்டமும் (12 ஆம் பக்கம் பார்க்க)

# படையினர் மீது தாக்குதல் நடத்துவோர் மீது திருப்பிச் சுட படையினருக்கு அதிகாரம்

### - இராணுவத் தளபதி தெரிவிப்பு

படையினர் மீது தாக்குதல் நடத்துபவர்கள் மீது படையினர் திருப்பித் தாக்குவதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சாந்தகொட்டே கொட தெரிவித்துள்ளார். படையினர் மீது தொடர்ச்சியாக நடத்தப்படும் தாக்குதல்களை இனியும் பொறுமையுடன் சகித்துக்கொண்டிருக்க முடியாதென அவர் மேலும் தெரிவித்துள்ளார். அத்துடன் புலிகள் எம்மீது தாக்குதல் நடத்தும் பட்சத்தில் அவர்கள் மீது திருப்பித் தாக்குதல் நடத்துவதை விட வேறு எந்த நடவடிக்கையினை இராணுவத்தினரால் மேற்கொள்ள முடியுமென அவர் கேள்வி எழுப்பியுள்ளார். கருணா அணியினருக்கு இராணுவத்தினர் ஒத்துழைப்பு வழங்கிவருவதாக புலிகளால் முன்வைக்கப்பட்ட கருத்தினை அவர் மறுத்துள்ளார். இதே வேளை புலிகளின் இரண்டு பிரிவினருக்கு இடையே நடைபெறும் மோதல்களை கட்டுப்படுத்தும் வகையிலான நடவடிக்கைகள் எதனையும் நாம் மேற்கொள்ள இயலாதெனத் தெரிவித்துள்ளார்.

# நோர்வே தூதரக அதிகாரிகள் யாழ். குடாநாட்டிற்கு விஜயம்

இலங்கையின் அனைத்துப்பகுதியிலும் தமிழ் மக்களது தற்போதுள்ள நிலைப்பாட்டினை அறிந்து கொள்வதற்கான முயற்சிகளை நோர்வேத் தரப்பு முடுக்கி விட்டுள்ளது. இது தொடர்பாக பொது அமைப்புக்கள் மற்றும் புத்திஜீவிகளது கருத்துக்களை அறிந்து கொள்வதற்கான விஜயமொன்றை நேற்று யாழ்ப்பாணத்திற்கான நோர்வே தூதுவராலய அதிகாரிகள் குழுவொன்று மேற்கொண்டிருந்தது.

முன்னதாக யாழ். பல்கலைக்கழகத்திற்கு விஜயம் செய்த நோர்வேத் தூதுவராலயத்தின் இரண்டாம் செயலாளர் மற்றும் ஆலோசகர் எவ்.விஜயநாதன் ஆகியோர் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் அவர்களைச் சந்தித்துப் பேச்சு நடாத்தினர். பின்னர் காலை 11.30 மணியளவில் நல்லூர் கோவில் வீதியிலுள்ள யாழ்.மாவட்ட அரச சார்பற்ற அமைப்புகளின் இணைய (12 ஆம் பக்கம் பார்க்க)

# நீதிமன்ற துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த ஒருவர் மரணம்

(கொழும்பு)

அக்கரைப்பற்று நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்து மட்டக்களப்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த சிறைச்சாலை உத்தியோகத்தர் நேற்று முன்தினம் இரவு மரணமானார்.

மட்டக்களப்புச் சிறைச்சாலை உத்தியோகத்தரான கணபதிப்பிள்ளை சிவகுமாரன் என்பவரே நேற்று முன்தினம் இரவு மரணமான வராவார். இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின்போது கருணாவின் சகா ஒருவரும் பலியானது தெரிந்ததே.

## குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

வவுனியா கோவிற்குளம் பிரதேசத்தில் மர்மமான முறையில் இறந்து கிடந்த குடும்பஸ்தர் ஒருவரின் சடலத்தை பொலிசார் மீட்டுள்ளனர். இந்த உடலுக்குரியவர் எம்.இராமலிங்கம் (வயது-48) என்பவரென இறந்தவரின் மகனால் அடையாளம் காட்டப்பட்டுள்ளது. இவர் எவ்வாறு இறந்தார் என்பது இன்னமும் தெரியவரவில்லையென வவுனியா பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

### விடுவிக்க நடவடிக்கை எடுக்க

# மட்டு.சிறையிலுள்ள புலிகள் கூட்டமைப்பு பா.உ களுக்கு கடிதம்

(கொழும்பு)

மட்டக்களப்புச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் தம்மை விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆயுதங்களை வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் தமிழீழ விடுதலைப்புலிகளின் நான்கு பெண்போராளிகள் உட்பட பதின்னான்கு பேர் மட்டக்களப்புச் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுள் பத்துப்பேர் கடந்த ஒரு வருடத்திற்கு மேலாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாங்கள் விடுதலை தொடர்பாக தமிழ் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் அக்கறை காட்டவில்லையென தெரிவித்து வந்த இவர்களை நேற்று முன்தினம் தமிழ் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற (12 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### காணி விற்பனைக்கு உண்டு

திருநகர் வடக்கு கிராமத்தில் இல 39 1/2 ஏக்கர் உறுதியுடன் கூடிய காணி வீடு, கட்டுக்கிணறுடன் இருக கின்றது. கிளிநொச்சி வைத்தியசாலை பின்புறமாக A-9 சாலையிலிருந்து 500 மீற்றர் பண்றோட்டில் அமைந்துள்ளது. தொடர்புகொள்க. கோ.சிவராஜா, திருநகர். (4995)

### A/L வர்த்தகப்பிரிவு மீட்டல் வினா விடை

மேற்படி பரீட்சை எழுதிய வர்த்தகப்பிரிவு மாணவர்களிற்கான துரித மீட்டல் வினா விடை வகுப்புக்கள் 28.08.2004 சனி காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகிறது. வழமையான ஆசிரியர் குழு: ஆதவன் கல்வி நிலையம் கிளிநொச்சி. (4994)

### இறைச்சிக் கோழி விற்பனைக்கு

எம்மிடம் புறொயிலர் இறைச்சிக கோழி விற்பனைக்குண்டு மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். சுடர் கோழி வளர்ப்பகம் புலிகளின் குரல் நடுவப்பணியகம் முன் ஒழுங்கை விவேகானந்தநகர் கிளிநொச்சி. (4996)

### தவறிவிட்டது ·

மார்கண்டு இளநேசன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை I.C.No: 840144623v அடங்கிய கறுப்பு நிற பேர்ஸ் 23.08.2004 அன்று மல்லாவிப் பகுதியில் மக்கள் வங்கிக்கும் தமிழீழ வைப்பகத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மல்லாவியில் உள்ள மக்கள் வங்கியில் ஒப்படைத்துதவவும். (4907)

## வீடு தீப்பற்றி எரிந்தது

(அலுவலக செய்தியாளர்)

திடீரென வீட்டில் தீப்பிடித்துக் கொண்டதில் வீடும் வீட்டிலிருந்த பொருட்களும் முற்றாக எரிந்து சாம்பராகின.

மேற்படி சம்பவம் கடந்த திங்கட்கிழமை பகல் 11.00 மணியளவில் கிளிநொச்சி கணேசபுரம் கிராமத்தில் இடம்பெற்றுள்ளது.

வீடு தீப்பிடித்ததற்கான காரணங்கள் இதுவரை தெரியவரவில்லை.

ச.குணரட்ணம் என்பவரது வீடும், வீட்டிலிருந்த பொருட்களுமே தீயினால் எரிந்து சாம்பராகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ,கு)

## வைத்திய ஆலோசனை

பூநகரிதியாகதீபம் திலீபன் மருத்துவ சேவையில் 24.08.2004 செவ்வாய் அன்று வைத்திய கலாநிதி சிவபாலன் அவர்களால் இருதயம் சம்பந்தமான நோயாளர்களைப் பார்வையிட்டதோடு மற்றும் அனைத்து நோய்களுக்கான வைத்தியமும் அதற்கான ஆலோசனைகளும் வழங்கப்பட்டது. இதில் 120 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர்.

### கணினி வகுப்புக்கள்

விசேட ஆங்கில, சிங்கள, கணினி வேக தட்டெழுத்து வகுப்புக்கள் நடைபெறுகின்றன. பாடசாலை மாணவர்களுக்கு கணினிப்பாட நெறி மாதாந்தம் 500/=

தொடர்பிற்கு
"டேற்றாபேசிக்",
இரணைமடுச்சந்தி,
(ராங்வியூ கோட்டல் அருகாமை)
கிளிநொச்சி. (4989)

## மேசன் தேவை

எமது நிறுவனத்தின் சில குறிப்பிட்ட கட்டடவேலைகளுக்கு உடனடியாக மேசன் வேலையாட்கள் தேவைப்படுகின்றனர். ஒப்பந்த அடிப்படையில் வேலைகள் வழங்கப்படும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். கீழ்க் குறிப்பிடும் விலாசத்திற்கு தகுதியுடையோர் உடன் நேரடியாக வரவும்.

வேள்ட்விஷன்
நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர்
இல.284, கண்டி வீதி, கிளிநொச்சி.
தொலைபேசி:-021 22 85930

(5002)

## கிளிநொச்சி வர்த்தகர் சங்கம் தரும் இரு விசேட அறிவித்தல்

01) கிளிநொச்சி வர்த்தகர்களுக்கான விசேட கலந்துரையாடல் 26.08. 2004 ஆம் திகதி பி.பகல 3.00 மணிக்கு டிப்போ சந்தியடியில் உள்ள கலாசார மண்டபத்தில் இடம் பெற இருப்பதால் பி.பகல் 2.00 மணியுடன் சகல வர்த்தக நிலையங்களையும் பூட்டி அனைத்து வர்த்தகர் களையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

02) அத்துடன் எதிர்வரும் 28.08.2004 கிளி.முருகன்கோவில் தேர்த்திருவிழாவை முன்னிட்டு வழமையான விடுமுறை தினம் போல கடைகள் பூட்டியிருக்கும் என்பதனையும் வாடிக்கையாளர்களுக்கு அன்புடன் அறியத்தருகின்றோம்.

வர்த்தகர் சங்கம்,
கிளிநொச்சி.

(5001)

## விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

பொருண்மியமதியுரையகத்தின் தங்குவிடுதிக்கு பின்வரும் பணிநிலைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. முகாமையாளர்(Manager)
தகைமை

* க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல வேண்டும்
*. நிர்வாக முன் அனுபவம் உள்ளவராக இருக்க வேண்டும்.
*. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

2. உதவியாளர்

*. 18 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்
*. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

முடிவுத் திகதி: –10. 09. 2004

நிறைவேற்றுப்பணிப்பாளர்,
பொருண்மியமதியுரையகம்,
இரணைமடுச்சந்தி,
கிளிநொச்சி.

(4998)

## சாவு அறிவித்தல்

### பொன்னர் ஐயம்பிள்ளை

புதுக்குடியிருப்பு 10ஆம் வட்டாரத்தை நிரந்தர வசிப்பிடமாகக்கொண்ட பிரம்புவெட்டுவான் ஐயம்பிள்ளை என அழைக்கப்படுபவரும் புதுக்குடியிருப்பு ஆயிலடி நாகம்பாள் ஆலய பூசகருமாகிய பொன்னர் ஐயம்பிள்ளை அவர்கள் 2004.08.24ஆம் திகதி காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற வியாழம்மாவின் அன்புக் கணவரும் ஜெயநாயகி, செல்வராசா, காலஞ்சென்ற ஜெயராசா விஜயலட்சுமி, உலகேஸ்வரி, சரோஜினிதேவி ஆகியோரின் அருமைதகப்பனாரும் செல்வநாயகம்சாரதி பல.நோ.கூ. சங்கம் புதுக்குடியிருப்பு, தெய்வானை, நகுலேஸ்வரி, காலஞ்சென்ற விஸ்வலிங்கம் வீரபாகு ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியை 7ஆம் வட்டாரம் பாஸ்கரன் வீதியில் அமைந்துள்ள மகளின் இல்லத்தில் நடைபெற்று புது.இந்து மயானத்தில் 2004.08.26 வியாழன் காலை 10 மணிக்கு பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: பேரன் செ.தயசீலன் கிராம
அலுவலர் சிவநகர், ஆனந்தபுரம்,
செ.ஜெயசீலன் (லண்டன்)
வீ.திலீபன் (லண்டன்.)

சி-9182)

## 5ஆம் ஆண்டு நீங்கா நினைவுடன்



தாயின் மடியில்
10-07-1984

தாயக மடியில்
26-08-1999

### 2ஆம் லெப் தூயவேங்கை

கிருஸ்னசாமி ~ வசந்தகுமாரி

அன்போடு பேசிய அழகு முகம் எங்கே
பண்போடு பழகிய பாச முகம் எங்கே
மழலை முகம் மாறாத எம் வீர மகளே
மாற்றான் படை அழிக்கும் – வீர
இலட்சியம் வரித்துக் கொண்டாயே
எம்மோடு நீ வாழ்ந்த ஒவ்வொரு
கணப் பொழுதின் நினைவுகளும் – எம்
கண்களில் நீர்த்துளிகளாய் இன்றும்
விடுதலைக்காய் உனை அர்ப்பணித்த – எம் செல்வமே
விடுதலைக்காய் அர்ப்பணிப்பதில் இத்தனை வேகமா

குடும்பத்தினர்

5003

## கண்ணீர் அஞ்சலி



### அமரர் இராசேந்திரம் வரதராசா

புதரிக்குடா கிராம அபிவிருத்தி சங்கத் தலைவரும், ஓய்வுபெற்ற வவுனியா வடக்கு கோட்டக்கல்வி அதிகாரியுமாகிய அமரர் இராசேந்திரம் வரதராசா அவர்களின் மறைவையிட்டு துயரில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அமரருக்கு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக் கின்றோம்.

புதரிக்குடா கிராம அபிவிருத்தி,
சங்கமும், கிராம மக்களும்.

(5004)

## கண்ணீர் அஞ்சலி



### அமரர் இராசேந்திரம் வரதராசா

த/ஊற்றங்கரை சிறிசித்திவிநாயகர் ஆலய பரிபாலன சபைத் தலைவரும் ஓய்வுபெற்ற வவுனியா வடக்கு கோட்டக்கல்வி அதிகாரியுமாகிய அமரர் இராசேந்திரம் வரதராசா அவர்களின் மறைவையிட்டு துயரில் ஆழ்ந்திருக்கும் குடும்பத் தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வ துடன் அமரருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

முள்ளியவளை. தண்ணீரூற்று ஊற்றங்கரை
ஆலயபரிபாலன சபையினரும்,
ஆலயக் குருக்களும்.

(5005)

## போராளிகள் சரணடைய மறுத்தால்

# தாக்குதல் நடத்துவது தவிர்க்க முடியாதது

### அமெரிக்கக் கூட்டுப்படை அதிகாரி

(பாக்தாத்)

**ஈராக்கின் புனித நகரான நஜாப்பில் வழிபாட்டுத் தலம் ஒன்றில் மறைந்துள்ள போராளிகள் மீது தாக்குதல் நடத்தும் நோக்கில் அமெரிக்கப் படையினர் முன்னேறி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

ஈராக்கின் ஷியா பிரிவு போராளிகள் வழிபாட்டுத் தலம் ஒன்றில் மறைந்திருப்பதாகக் கிடைத்த தகவலையடுத்து அந்தப் பகுதியை சுற்றிவளைத்துள்ள அமெரிக்கக் கூட்டுப்படையினர் போராளிகளைச் சரணடையுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமது அழைப்பை ஏற்று போராளிகள் சரணடையாது விட்டால் அவர்கள் மீது தாம் தாக்குதல் நடத்துவது தவிர்க்க முடியாததாகி விடும் என்று அமெரிக்கக் கூட்டுப் படையின் அதிகாரி ஒருவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## ஈராக்கில் கார்க்குண்டுத் தாக்குதல்

# 4 பேர் பலி; அமைச்சர் உயிர் தப்பினார்

(பாக்தாத்)

ஈராக் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் அமைச்சர் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார். சுற்றுச்சூழல் துறை அமைச்சர் மிஸ்கத் அல்-மவுமின் மீதேவெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தச் சம்பவத்தில் அமைச்சர் மயிரிழையில் உயிர் தப்பினார். ஆனால் நான்கு பேர் பலியாகினர். ஈராக்கில் தங்கியுள்ள அமெரிக்கக் கூட்டணிப்படைகளை வெளியேறக்கோரி சதாம் ஆதரவு கெரில்லாத் தீவிரவாதிகள் பல்வேறு நாச வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர். வெளிநாட்டுப் படையினர் தங்கியுள்ள முகாம் மீதும், ஈராக்கின் இடைக்கால ஆட்சியாளர்கள் மீதும் தற்கொலை படை தாக்குதல் நடத்தி வருகின்றனர். ஈராக்கின் சுற்றுச் சூழல் துறையைக் கவனிக்கும் பெண் அமைச்சரான மிஸ்கத் அல்-மவுமின் பாக்தாத்தின் தெற்குப் பகுதியில் நேற்றுக் காரில் சென்ற போது தற்கொலைப் படையினர் கார்வெடிகுண்டுத் தாக்குதலை நடத்தினர். இந்தச் சம்பவத்தில் அமைச்சரின் பாதுகாவலர்கள் வந்த கார் சேதமடைந்தது. மேலும் நான்கு கார்கள் தீயில் எரிந்து சாம்பராயின. நான்கு பேர் உடல் சிதறிப் பலியானார்கள். சாலையில் நடந்து சென்ற மூன்று பேர் படுகாயமடைந்தனர். இதற்கிடையே ஷியா முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் நஜாப் பகுதியில் தீவிரவாதிகளுக்கும், அமெரிக்கப் படைகளுக்கும் சண்டை நடந்து வருவதால் அங்குள்ள பெரிய மருத்துவமனை மூடப்பட்டுள்ளது. இதனால் ஏராளமான அப்பாவி மக்கள் சிகிச்சை பெற முடியாமல் இறந்து வருகின்றனர். சண்டையில் காயமடைபவர்களுக்கும் சிகிச்சை பெற வழியில்லாமல் உள்ளது. நஜாப்பில் நாச வேலையில் ஈடுபட்டுள்ள ஷியா தீவிரவாதிகள் தங்கள் ஆயுதங்களை ஒப்படைத்து விட்டு சரணடைய வேண்டும் இல்லாவிட்டால் அவர்களை ஒழிக்கும் நடவடிக்கையில் ஈராக் இராணுவம் ஈடுபடும் என இடைக்கால பிரதமர் இயாத் அல்லாவி எச்சரித்துள்ளார்.



தாய்வானின் எல்லையில் அமைந்துள்ள சீனாவின் சங்சங் நகரில் வீசிய தைபூன் சூறாவளியையடுத்து ஏற்பட்ட வெள்ள நீரினூடாக நடந்து செல்லும் மக்கள்.

## 8ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்த

# பெண்ணின் எலும்புக்கூடு மீட்பு

(சிங்கப்பூர்)

எட்டாயிரம்ஆண்களுக்குமுன் வாழ்ந்த பெண்ணின் எலும்புக்கூடு ஒன்றை மலேசியா தொல்லியல் ஆய்வுத்துறையினர் கண்டுபிடித்துள்ளனர். மலேசியாவில் உள்ள 'செயின்ஸ் மலேசிய பல்கலைக் கழக' பேராசிரியர் ஜுரைனா மஜித் இது குறித்து நிருபர்களிடம் கூறிய தாவது; மலேசியாவின் வடபகுதியில் உள்ள பெராக்கில் குவா கெலுக் கெலாவார் என்ற இடத்தில் அகழ்வாய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அப்போது ஒரு பெண்ணின் எலும்புக்கூடு கிடைத்தது. அந்தக்கூடு 148 செ.மீ உயரம் இருந்தது. கடந்த எட்டாயிரம் ஆண்டு களுக்குமுன் வாழ்ந்த பெண்ணின் எலும்புக்கூடாக இருக்கலாம் என்று முதற்கட்ட ஆய்வில் தெரியவந்துள்ளது. அவர் இறக்கும் போது 40 வயது இருந்திருக்கும். இறந்த பெண்ணைப் புதைக்கும் போது கற்கள், உணவுப்பொருட்கள் போன்றவற்றையும் வைத்துப்புதைத்துள்ளனர். இறந்தவர்களைப் புதைக்கும் போது சடலத்துடன் இதுபோன்ற பொருட்களை வைத்துப்புதைப்பது வழக்கமே. ஆனால் தற்போது கிடைத்த பெண்ணின் எலும்புக்கூட்டுடன் எலி, குரங்கு போன்றவையும் புதைக்கப்பட்டுள்ளன. அவற்றின் எலும்புகளும் கண்டுபிடிக்கப்பட்டன. பெண்ணின் எலும்புக் கூட்டை சி.டி.ஸ்கேன் செய்து ஆய்வுசெய்தபோது வாய்த்தொற்று நோயால் அப்பெண் இறந்திருக்கக் கூடும் என்று தெரிகிறது. இவ்வாறு பேராசிரியர் ஜுரைனா மஜித் கூறினார்.



நஜாப்பில் தனது இயந்திரத் துப்பாக்கியை பரிசோதனை செய்யும் அமெரிக்க ஏப்ரகாம் டாங்கி கட்டளைப் படைவீரர்.

## ஐ.நா.வுக்கான இந்தியப் பிரதிநிதியாக

# நிருபம் சென் பொறுப்பேற்றார்

(நியூயோர்க்)

இந்தியா சார்பில் ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தரப் பிரதிநிதியாக நிருபம் சென் பொறுப்பேற்றுள்ளார் இதற்கு முன் இப்பதவியில் விஜய் கே. நம்பியார் வகித்தார். 1969 ஆம் ஆண்டு பிரிவைச் சேர்ந்த இந்திய வெளியுறவுத்துறை அதிகாரியான நிருபம் சென். புதிய பதவியை ஏற்கும் முன் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தின் தலைமை அதிகாரியாக இருந்தவர் பிரிட்டன் ரஷ்யா, போலந்து, ஹங்கேரி, பல்கேரியா உள்ளிட்ட நாடுகளில் பல்வேறு பதவிகளை அவர் வகித்து வந்துள்ளார்.





மொஸ்கோவுக்குத் தெற்கே 600 மைல்களுக்கப்பால் நிகழ்ந்த மேலும் ஒரு விமான விபத்தில் தூ. முற்ற ரஷ்யாவின் TU-154 ரக விமானம்.

## ரஷ்யாவில் விமான விபத்து; 89 பேர் பலி

# மற்றொரு விமானமும் மாயம்

(மொஸ்கோ)

ரஷ்யாவின் தலைநகர் மாஸ்கோ விலிருந்து 160 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள துலா என்ற பகுதியில் விமானம் விபத்துக்குள்ளானதில் அதிலிருந்த 89 பேரின் கதி என்னவென்று இதுவரை தெரியவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கிடையில் மாஸ்கோவிலிருந்து புறப்பட்ட மற்றொரு விமானமும் மாயமாகியுள்ளது. இந்த இரு விமானங்களும் விபத்திற்குள்ளானது. மற்றும் காணாமற் போன விவகாரத்தில் தீவிரவாதிகள் பங்கு இருக்கும் என்று அஞ்சப்படுகிறது. இது குறித்து விசாரணை நடத்த ரஷ்ய சனாதிபதி புட்டின் உத்தர விட்டுள்ளார்.

## நிலத்தடி நீர்மட்டத்தில் திடீர் மாற்றம்

# 1.6 சதுர கிலோமீற்றர் நிலம் பூமிக்குள் புதைந்தது


(பெய்ஜிங்)

நிலத்தடி நீர்மட்டத்தில் ஏற்பட்ட திடீர்மாற்றத்தால் சீனாவில் 1.6 சதுர கிலோ மீற்றர் நிலம் பூமியில் புதைந்தது. இதில் ரூபா 81 கோடி மதிப்புள்ள சொத்துக்கள் சேதமாயின. சீனாவில் குவாங்டாங் மாகாணத்தில் நிலத்தடி நீர்மட்டத்தில் ஏற்பட்ட திடீர் மாற்றத்தால் 8 இடங்களில் நிலம் பூமியில் புதைந்தது என்று 'சீன டெய்லி' செவ்வாய்க் கிழமை கூறியுள்ளது. இதில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. வெள்ளிக்கிழமை ஏற்பட்ட இந்த விபத்தில் 725 வீடுகள் சேதமடைந்தது. சுமார் 2ஆயிரத்து 600 பேர் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறினர். 2 கிலோ மீற்றர் தூரத்திற்கு சாலைகளும், 2 சிறு பாலங்களும் சேதமானது. பாதிக்கப்பட்டவர்கள் அவர்களின் உறவினர்களின் வீடுகளில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு உணவு மானியம் வழங்கப்படுகிறது.





மொஸ்கோவுக்கு 200 கி.மி தொலைவில் புச்சால்கி கிராமத்தில் நேற்று நடைபெற்ற விமான விபத்தில் ரஷ்யாவின் TU-134 ரக விமானத்தின் சிதைவுகள்.



அமெரிக்க இராணுவத்தினருடனான சண்டையில் பலியான அல்-சதார் ஆதரவுப் போராளியின் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொள்ளும் ஏனைய ஆதரவாளர்கள்.

# வீதிப் போக்குவரத்திற்கு இடையூறு விளைவிப்போர் மீது சட்டநடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

**தமிழீழ காவல்துறை வாகனப் போக்குவரத்துப் பிரிவினரால் வீதிப்போக்குவரத்திற்கு ஊறுவிளைவிக்கும் வகையில் செயற்பெறும் வாகன ஓட்டிகள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப் பெற்று வருவதனைக் காணக்கூடியதாகவுள்ளது.**

மேற்படி செயற்பாடுகள் குறித்து தமிழீழ காவல்துறை வாகனப் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் ப.சிவகுமாரன் தெரிவிக்கையில்;

வீதி விபத்துக்களைத் தடுக்கும் நடவடிக்கையில் தற்போது காவல்துறை வாகனப் போக்குவரத்துப் பிரிவினர் துரித நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர் எனவும். இதனடிப்படையில் உந்துருளிகளில் மூவர் பயணிப்பது தடைசெய்யப் பெற்றுள்ளதாகவும், இது வாடகைக்குச் செலுத்தும் உந்துருளி ஓட்டுனர்களுக்கும் பொருந்துமெனவும், அத்துடன் வாகனத்தில் முகப்பு வெளிச்சம் நீலம், பச்சை நிறங்கள் பொருத்துவது ஏனைய வாகன ஓட்டிகளுக்கு பலத்த இன்னல்களை தோற்றுவிப்பதன் காரணமாக, வீதிவிபத்துக்கள் ஏற்படக்காரணியாக அமைந்துள்ளதன் விளைவாக மேற்படி நிறங்களைப் பொருத்தியவாறு பயணிப்பதும் தடைசெய்யப்பட்டுள்ளதெனவும் தெரிவித்துள்ளதுடன், இவற்றினை அனுசரித்து நடக்கத்தவறுவோர் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மதுபோதையில் வாகனங்களைச் செலுத்துபவர்கள் மீது கடும் சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் தெரிவித்துள்ளதுடன்;

இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட வாகன ஓட்டுநர்கள் மேற்படி நடவடிக்கைகளைக் கண்டிப்பாக அனுசரித்து நடக்கும் வண்ணம் வேண்டுகை விடுத்துள்ளார்.(சோ,கு)

# 'தாய்மடியின் தாலாட்டு' ஒலிப்பேழை; கிளிநொச்சியில் அறிமுக விழா

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ விடியல் இசைக்குழுவினரால் உருவாக்கம் பெற்ற 'தாய் மடியின் தாலாட்டு' எனும் இசைத்தட்டு மற்றும் ஒலிப்பேழையின் அறிமுக விழா நேற்று முன்தினம் கிளிநொச்சிபண்பாட்டு மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

ஏற்கனவேஇவ் ஒலிப் பேழைகளின் பாடல்கள் வெளிவந்த நிலையில், இதன் அறிமுக விழாக்கள் தமிழீழத்தின் பல பகுதிகளிலும் நடைபெற்று வருகின்றன. அதனடிப்படையில் கிளிநொச்சியில் நடைபெற்ற இவ் விழாவில் தமிழீழ தேசியக் கொடியினை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் சிறப்புத் தளபதி லெப்டினன்ட் கேணல். நகுலன் அவர்கள் ஏற்றிவைத்தார், தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் ஆரம்பமாகின. நிகழ்வில் தமிழீழ விடுதலைப்போரில் வீரச்சாவடைந்த முதல் எல்லைப்படை மாவீரரின் திருவுருவப்படத்திற்கு அவரது துணைவியார் சுடர் ஏற்றினார். அடுத்து நிகழ்வின் தலைமையுரையினை கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஆ.காணடீபன் அவர்கள் நிகழ்த்தினார். தொடர்ந்து ஒலிப்பேழையின் மதிப்பீட்டுரையினை புலிகளின் குரல் வானொலி நிறுவனப்பொறுப்பாளர் தமிழன்பன் நிகழ்த்தினார். அறிமுக உரையினை கவிஞர் பொன்காந்தன் நிகழ்த்த, சிறப்புரையினை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் சிறப்புத் தளபதி லெப்டினன்ட் கேணல் நகுலன் நிகழ்த்தினார். அடுத்து ஒலிப்பேழைப் பிரதிகள் வழங்கப்பட்டன. நிகழ்வின் முதற்பிரதியினை லெப்டினன்ட் கேணல். ராஜன் கல்விக்கல்லூரிப் பொறுப்பாளர் கீதன் வழங்கி வைக்க,எல்லைப்படை முதல் மாவீரன் அப்பனின் துணைவியார் பெற்றுக் கொண்டார். அடுத்து போராளிக் கலைஞரும் ஒலிப்பேழையின் நெறியாள்கையாளருமான செங்கதிர் பதிலுரையினை நிகழ்த்தினார். தொடர்ந்து விடியல் இசைக்குழுவின் கலைஞர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. பரிசில்களை லெப்.கேணல் நகுலன் புலிகளின் குரல் நிறுவனப்பொறுப்பாளர் தமிழன்பன் ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர். தொடர்ந்து விடியல் இசைக்கலைஞர்களின் இசை நிகழ்வும்இடம்பெற்றது.இந் நிகழ்வில பொதுமக்கள், போராளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச,தீ)



# வட்டக்கச்சி முன்பள்ளிகளுக்கான ஆக்கப் பொருட் கண்காட்சி

வட்டக்கச்சிப் பிரதேசத்தில் உள்ள இருபத்தொரு முன்பள்ளிகளுக்கான ஆக்கப்பொருட்கண்காட்சியானது நேற்று முன்தினம் காலை9.30 மணிக்கு நிறுவனத் தலைவர் கண்ணன் தலைமையில் இடம் பெற்றது. கண்காட்சிக்கு வருகை தந்தவர்கள் முன்பள்ளிச் சிறார் களின் இசையும் அசைவுடன் அழைத்துவரப்பட்டனர். பிரதம விருந்தினர்களாக முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் சி.சிவநாதன் மற்றும் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் ரேணுகா





படங்கள்:- ரூபன்

ஆகியோர் கலந்து கொண்டனர். சிறப்புரைகளை கிராமசேவகர் தண்டாயுதபாணி அவர்களும், அரசியல்துறையைச் சேர்ந்த இராமஜெயம் அவர்களும் நிகழ்த்தினார்கள். ஆசியுரையினை செல்வி ரேணுகா வழங்கினார். அதனைத் தொடர்ந்து முன்பள்ளிகளுக்கான ஆக்கப் பொருட்கண்காட்சி மண்டபத்தினை முன்பள்ளி உதவிக்கல்விப் ப[ரா]ரிப்பாளரும், முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிறுவனத் தலைவருமாகிய சிவதாசன் அவர்கள் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். அதனை தொடர்ந்து ஆக்கப் பொருட்களை பலதரப்பட்ட பிரமுகர்களும், பொதுமக்களும் பார்வையிட்டனர். (12)

# கட்டடங்கள் அமைப்பதற்கு முன் பிரதேச சபையின் அனுமதி பெறவேண்டும்

## கரைதுறைப்பற்று பி.செ அறிவிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேசத்தில் எவ்வகையான கட்டடம் அமைப்பதாக இருந்தாலும் கரைதுறைபற்று பிரதேச சபையின் அனுமதி பெற்ற பின்பே அமைக்க வேண்டுமென கரைதுறைப்பற்று பிரதேச சபையின் செயலாளர் இ.கிருஷ்ணபிள்ளை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; அண்மைக்காலமாக இப் பிரதேசத்தில் பிரதேச சபையின் அனுமதி பெறாமல் பல கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டுவருவது அவதானிக்கப்பட்டுள்ளதாகவும், இதனால் நகர அபிவிருத்திக்கும், சுகாதார முறைகளைப் பேணுவதற்கும் இடர்ப்பாடுகள் ஏற்படுவதாகவும், மக்களினதும் இப்பிரதேசத்தினதும் நன்மை கருதி கட்டடங்களை நிர்மாணிப்போர் உரிய அனுமதியை பிரதேசசபையிடமிருந்து பெற்றுக் கொள்வது மிகவும் அவசியமானதாகும் எனவும், ஏனெனில் வீடமைப்பு மற்றும் நகர மேம்பாட்டுக்கான கட்டளைச் சட்டத்தின் பிரகாரம், கரைதுறைபற்று பிரதேச சபைக்குட்பட்ட ஒரு இடத்தில் தனியாருக்குச் சொந்தமான காணியிலோ அல்லது அரசிற்குரிய காணியிலோ ஒரு குடியிருப்புக் கட்டடம், ஒரு வர்த்தகக் கட்டடம், ஒரு களஞ்சியக் கட்டடம், ஒரு ஆக்கத்தொழிற்றுறைக்கட்டடம் அல்லது ஒரு பகிரங்கக் கட்டடம், அரச அலுவலகக் கட்டடங்கள் உட்பட அமைத்தலுக்கு (மு)ன்பாக பிரதேச சபையின் எழுத்து மூலமான அனுமதி பெறுவது அவசியமென்றும், அவ்வாறுஅனுமதி பெறாமல் கட்டடங்கள் நிர்மாணிப்பது தண்டனைக்குரிய குற்றமாவதுடன், அத்தகைய கட்டடங்கள் உரிய நியமங்களுக்கு அமையாதுவிடின் அவற்றை அகற்றுவதற்கோ அல்லது இடித்து விடவோ வேண்டிய தேவை ஏற்படும் எனவும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.(20)

# சேவைக்காலப் பயிற்சி

முல்லை மாவட்ட சுகாதாரப் பணியாளர்களுக்கான சேவைக் காலப் பயிற்சி வகுப்பு எதிர்வரும் 6,7,8 ஆகிய நாட்களில் கரைதுறைபற்று உதவி அரச அதிபர் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற உள்ளது.

யுனிசெப் நிறுவனத்தின் நிதியுதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும் இப் பயிற்சியில் குடும்ப நல சேவையாளர்கள், சுகாதாரத் தொண்டர்கள்,மருத்துவ மாதுக்கள் போஷாக்குத் தொண்டர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஆகியோர் பயிற்சிகளைப் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (20)

# வவு.மருத்துவமனையில் போதியளவு நீர் இல்லை

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் நோயாளர்களுக்குப் போதிய அளவுநீர் வழங்கமுடியாமல் பெரும் சிரமப்படுவதாக மாவட்ட வைத்திய அதிகாரி பி.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார். வவுனியா பொது வைத்தியசாலை வளாகத்தில் உள்ள ஐந்து கிணறுகளில் நான்கில் நீர்வற்றிவிட்டதாகவும் ஒரு கிணற்றில் மட்டும் நீர் இருப்பதை வைத்து சமாளிக்க முடியாது இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.தற்போது நாள் ஒன்றுக்கு ஆறு நீர்த்தாங்கிகளில் படையினர் வழங்கும் நீர் தமக்குக் கிடைத்து வருவதாகவும் வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்தார். (21)

# 2004ஆம் ஆண்டிற்கான வாக்காளர் இடாப்புத் திருத்தம்

2004ஆம் ஆண்டிற்குரிய வாக்காளர் இடாப்புக்களின் திருத்தம் ஆரம்பமாகியுள்ளதென வவு.தேர்தல் அலுவலகம் அறிவித்துள்ளது. 11 வன்னித் தேர்தல் மாவட்டத்தில் வசித்த பெருந்தொகையான மக்கள் இடம்பெயர்ந்து மாவட்டத்திற்கு வெளியே வசிப்பதன் காரணத்தினால் வீடுவீடாகச்சென்று படிவங்கள் வழங்கி வாக்காளர் இடாப்புக்களைத் திருத்தும் வழமையான நடைமுறைக்குப் பதிலாக புதிய அங்கீகரிக்கப்பட்ட நடைமுறையின் பிரகாரம் வாக்காளர் இடாப்புக்களைத் திருத்தும்வேலையை அமுல்படுத்துவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(அ) ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிற்குமுரிய வாக்காளர் இடாப்புக்கள் அந்தந்தப் பிரிவிற்குரிய பிரதேச செயலகத்தில்/ தேர்தல் அலுவலகத்தில்/ பிரதேச அலுவலகத்தில்/ கிராம அலுவலர் அலுவலகத்தில் 2004ஓகஸ்ட் 19ஆம் திகதி தொடக்கம் 2004 செப்ரெம்பர் மாதம் 10ஆம் திகதி வரை அலுவலக நேரத்தில் பொது மக்களின் பார்வைக்குவைக்கப் பட்டிருக்கும்.

(ஆ) வாக்காளராக இருக்கத் தகுதியுள்ள ஒவ்வொருவரும் தமது பெயர், வாக்காளர் பதிவேட்டில் பதியப்பட்டிருக்கிறதா என்பதனை மேலே குறிப்பிடப்பட்டுள்ள அலுவலகங்களில் உள்ள வாக்காளர் இடாப்பினை பரிசீலனை செய்வதன் மூலம் நிச்சயப் படுத்திக்கொள்ளலாம்.

(இ) வாக்காளர் இடாப்பினை பரிசீலனை செய்து தமது பெயர் அவ்விடாப்பில் பதியப்படவில்லை எனக் காணும் ஒவ்வொருவரும், அத்துடன் 2004ஆம் ஆண்டு யூன் மாதம் 01ஆம் திகதி 18அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடைய ஒவ்வொருவரும் வாக்காளர் இடாப்பில் தமது பெயரைக் கீழ்க்காணும் முறையில் பதிவித்துக்கொள்ளலாம்.

(ஈ) இதற்கான படிவத்தினை தமது பிரிவு கிராம அலுவலரின் அலுவலகத்தில் பெற்று அதனைப் பூரணப்படுத்தி உரிய அத்தாட்சிகளுடன் தமது கிராம அலுவலரின் அலுவலகத்தில் கையளிப்பதன் மூலம் தமது பெயரை வாக்காளர் இடாப்பில் பதிவுசெய்து கொள்ளலாம். (20)

# நூல்வெளியீட்டுவிழா

(அலுவலக செய்தியாளர்)

தமிழ்க்கவியின் "இருள் இனி விலகும்" புதிய நூல் வெளியீட்டு விழா கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 28ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு மேற்படி நூல் வெளியீட்டுவிழா இடம்பெறவுள்ளது. (சோ,கு)

# தமிழ் மக்களின் அரசியல் ரீதியான பலத்தை சிங்கள தேசம் இன்று உணர்ந்துள்ளது

## -வன்னி மாவட்ட பா.உ.கனகரட்ணம்

(யாழ்ப்பாணம்)

**தமிழ் மக்கள் அரசியல்ரீதியாகவும் பலம் பெற்றுள்ளனர் என்பதைச் சிங்களதேசம் இன்று உணர்ந்துள்ளது. இதனாலேயே தமிழ் மக்களது கோரிக்கைகளை நிராகரித்து விடமுடியாத நிலை சிறிலங்கா அரசதலைமைகளுக்கு ஏற்பட்டுள்ளது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.கனகரட்ணம் தெரிவித்துள்ளார்.**



யாழ்.திருநெல்வேலி கிழக்கு வாலை அம்மன் சனசமூக நிலையத்தின் வைரவிழா நிகழ்வு நேற்று முன்தினம் நிலைய மைதானத்தில் இடம்பெற்றது. அதில்கலந்து கொண்டு உரையாற்றும்போதே கனகரட்ணம் இதனைத் தெரிவித்தார்.

தமிழீழ தேசியத்தலைமையில் அணிதிரண்டு நிற்கும் தமிழினம் அசைக்க முடியாத அரசியல், இராணுவபலம் பெற்ற இனமாக இன்று தலைநிமிர்ந்து நிற்கிறது.

இவ்வாறு ஒன்று திரண்டு நிற்கும் தமிழினத்தைப் பிளவுபடுத்திவிட சில தீயசக்திகள் முயன்று வருகின்றபோதும் தமிழ் மக்கள் தமிழீழ தேசியத்தலைவர் பிரபாகரன் அவர்களை மட்டுமே தமது ஏகதலைமையாக ஏற்று நிற்பதால் தமிழ் மக்கள் தமது பலத்தைத் தொடர்ந்தும் தக்கவைத்துக்கொண்டுள்ளனர்.

இதனால் தமிழ்மக்கள்புலிகளின் தலைமையில் பலம்பெற்ற இனமாக இருப்பதால் அவர்களின் கோரிக்கைகளுக்கு சிறிலங்கா அரசு கட்டாயம் செவிசாய்க்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என அவர் மேலும்தெரிவித்தார். (33)

# செல்வச் சந்நிதிஆலய தேர்வெள்ளோட்டம் நாளை

யாழ்.தொண்டமனாறு செல்வச்சந்தி ஆலயத்தில் · விநாயகப் பெருமானுக்கும் முருகப்பெருமானுக்கும் புதிதாக அமைக்கப்பட்ட சித்திரத் தேர்களின் வெள்ளோட்டவைபவம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறும்.

கடந்த 19 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வரும் இவ்வாலய மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (29 ஆம் திகதி)யும்,தீர்த்தத் திருவிழா திங்கட்கிழமையும் நடைபெறும்.

# கணினிப்பயிற்சி நிலையங்கள் 5 பாடசாலைகளில் நிறுவத்திட்டம்

யாழ்.குடாநாட்டிலுள்ள பாடசாலைகள் ஐந்தினில் மேலும் கணினிப் பயிற்சி நிலையங்களை நிறுவக் கல்வி, கலாசாரம் மற்றும் மனிதவளமேம்பாட்டு அமைச்சு முன்வந்துள்ளது.

ஆசியஅபிவிருத்தி வங்கி நிதியுதவியுடன் இரண்டாம் நிலை கல்வித் திட்டத்தின் கீழேயே இக் கணினிப் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம், வதிரி திரு இருதயகல்லூரி, வேலணை மத்தியமகாவித்தியாலயம் வசாவிளான் மத்தியமகாவித்தியாலயம் மற்றும் அளவெட்டி அருணோதயா கல்லூரி என்பவற்றிலேயே இவைநிறுவப்படவுள்ளன. (27)

# யாழ்ப்பாணம்-காரைநகரிடையே சீரற்றபோக்குவரத்துச் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்- காரைநகர் ஆகிய பகுதிகளுக்கிடையே இடம்பெறும் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பேருந்துச்சேவை சீரான முறையில் இடம்பெறாததால் பயணிகள் பல்வேறு சிரமங்களையும் அனுபவித்து வருகின்றனர்.

இதனால் பயணிகள் எதிர் கொண்டுள்ள சிரமங்களை போக்குவதற்காக சீரான பேருந்துச் சேவையை மேற்படி பிரதேசங்களுக்கிடையே நடத்த முன்வருமாறு போக்குவரத்துச் சபையை மக்கள் கோரியுள்ளனர். (33)

# யாழ்.இல் குடியிருப்புகளுக்கு அண்மையிலுள்ள படைமுகாம்களை அகற்றக் கோரிக்கை

## -தமிழ்ப் பெண்கள் பண்பாட்டு மையம் விடுத்தது

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் மக்கள் குடியிருப்புக்களை அண்மித்துள்ள படைமுகாம்கள் அகற்றப்படல் வேண்டும் என தமிழீழ பெண்கள் பண்பாட்டுமையம் கோரிக்கை விடுத்துள்ளது.

மக்களின் குடியிருப்புக்களை அண்மித்தும், பொது மக்கள் நடமாட்டமுள்ளபகுதிகளிலும் உள்ள படைமுகாம்கள் மற்றும் காவலரண்களில் நிலைகொண்டிருக்கும் படையினரது செயற்பாடுகள் பெண்களின் இயல்பான செயற்பாடுகளுக்கு அச்சுறுத்தலாக இருக்கின்றமையைச் சுட்டிக் காட்டியே இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மக்கள் நடமாட்டமுள்ள பகுதிகளில் நிலை கொண்டுள்ள படையினர் பெண்களைக் கேலி செய்வது, அச்சுறுத்துவது போன்ற தகாத செயல்களில் ஈடுபடுவதாக யாழ்.குடாநாட்டின் பல்வேறு பெண்கள் அமைப்புக்களும் சுட்டிக்காட்டியுள்ளன. (33)

# யாழ் .அரச எழுதுவினைஞர்களுக்கு துறைசார் பயிற்சி வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணத்திலுள்ள அரச திணைக்களங்களில் பணியாற்றும் எழுதுவினைஞர்களது துறைசார் அறிவினை மேம்படுத்துவதற்கு "நீர்ப்" அமைப்பின் தொழில் துறை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் யாழ்.பிரதேச செயலர் பிரிவில் உள்ள திணைக்களங்களில் கடமையாற்றும் எழுதுவினைஞர்களுக்கான விசேட செயலமர்வு ஒன்று எதிர்வரும் 28ஆம் திகதி எட்டு மணிக்கு யாழ்.அரச செயலகத்தில் இடம்பெறவுள்ளது. (33)

# இந்தியாவிலிருந்து யாழ்.திரும்பியுள்ள குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குக

## மனித உரிமைகள் அமைப்பு அரசிடம் வலியுறுத்து.

(யாழ்ப்பாணம்)

இந்தியாவிலிருந்து யாழ்.குடாநாட்டிற்கு மீளக்குடியமரத் திரும்பியுள்ள குடும்பங்களுக்கு உலருணவு நிவாரண உதவிகளை வழங்க அரசாங்கம் உடனடிநடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மேம் படுத்தலுக்குமான அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

யாழ்.குடாநாட்டில் கடந்த காலங்களில் இடம்பெற்ற இராணுவ ஆக்கிரமிப்புக்களால் இடம்பெயர்ந்து சென்று இந்தியாவில் உள்ள அகதிமுகாம்களில் தஞ்சம் புகுந்து வாழ்ந்து விட்டு ஏராளமான குடும்பங்கள் மீளக்குடியமரத் திரும்பியுள்ள போதும் அவர்களுக்கு அரசினால் வழங்கப்படவேண்டிய நிவாரண உதவிகள் எதுவும் வழங்கப்படவில்லை.

இதனால் இவ்வாறாக மீளக் குடியமரத் திரும்பியுள்ள மக்களின் வாழ்வுரிமை மீறப்படுவதாகச் சுட்டிக்காட்டியே இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (33)

# கட்டைவேலி, நெல்லியடி ப.நோ.கூ.ச 82ஆவது கூட்டுறவு தினவிழா

கட்டைவேலி,நெல்லியடி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் 82 ஆவது கூட்டுறவு தினவிழா நேற்றுக்காலை சங்கத் தலைவர் த.சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் நடைபெற்ற இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச்சங்கச் சமாசத்தலைவர் சு.சிவசுப்பிரமணியம்கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினராக யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ.கனகசபாபதி,யாழ்மாவட்ட கூட்டுறவு நிர்வாகப் பொறுப்பாளர் புஸ்பகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர். கௌரவிருந்தினர்களாக நெல்லியடி மெ.மி.அ.த.க. பாடசாலை அதிபர் ஐ.நடராசா மாணிக்கவாசகர் வித்தியாலய அதிபர் இ.ராகவன் ஆகியோர் கலந்து கொண்டனர். அத்துடன் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில்கள் வழங்கல், வலய மாவட்டமட்ட கல்விசார் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்கள் வழங்கல் கலைநிகழ்வுகள் என்பன இடம் பெற்றன.இன்று இரண்டாவது நாளாக நடைபெறவுள்ள நிகழ்வுக்கு சங்கத்தலைவர் ஆ.சண்முகம் தலைமைதாங்குவார்.

# இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து மகாசங்கத்தினர் கலந்துரையாடல்

(கொழும்பு)

வடக்கு- கிழக்கு பிரச்சினைக்கு நிலையான தீர்வொன்றைக் காணும் முகமாக மகாசங்கத் தினருடன் கலந்துரையாடு வதற் கான கூட்டம் ஒன்றிற்கு மல்வத்த பீடாதிபதி திப்பொற்றுவவே சிறிசித்தார்த்த சுமங்கல தேரர் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றார்.

மகாநாயக்க தேரர்கள், நிக்காயாக்கள் உட்பட மகாசங்கத்தின் முன்னணி உறுப்பினர்களுக்கான இக் கூட்டம் விரைவில் நடைபெறும் என மல்வத்த பீடாதிபதி செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

இக் கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானங்கள் அரசியல் தலைமைத்துவத்திடம் எடுத்துக் கூறப்படும் என்றும், அதற்கு முன் மகா நாயக்கர் ஏனைய தலைமைப் பௌத்தமத துறவிகள் மற்றும் பாமர மக்கள், அவர்களின் அமைப்புக்கள் என்பவற்றுடன் கலந்துரையாடுவார் என்றும் ஆங்கிலநாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

# அமைச்சின் சொத்துக்களை ஒப்படைக்கவில்லை முன்னாள் அமைச்சர் மீது குற்றச்சாட்டு

(கொழும்பு)

இரண்டரை மில்லியன் ரூபாய்கள் பெறுமதியான அமைச்சின் சொத்துக்களை முன்னாள் அமைச்சர் ஒருவர் இன்னமும் திருப்பி ஒப்படைக்கவில்லையென நீதிவானிடம் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் மீன்பிடி நீரியல் வளங்கள் அமைச்சர் மகிந்த விஜேயசேகரவே இவ்வாறு குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.

மீன்பிடி அமைச்சிற்குச் சொந்தமான பல சொத்துக்களை விஜேயசேகரவினால் மீள ஒப்படைக்கப் படவில்லையென அமைச்சின் செயலாளர் மற்றும் மேலதிக செயலாளர் மற்றும்மேலதிக செயலாளர் ஆகியோர் கொடுத்த முறைப்பாட்டின் பேரில் விசாரணை நடாத்திவரும் மாளிகாவத்தைப் பொலிசார் இது குறித்து கொழும்பு மேலதிக நீதிவானுக்கு அறிவித்துள்ளனர்.

இதேவேளை ஒன்றரை மில்லியன் ரூபாய்கள் பெறு மதியான பொருட்களை முன்னாள் அமைச்சர் விஜேயசேகர மீளவும் அமைச்சிடம் ஒப்படைத்திருப்பதாக பொலிஸ்-சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

## 15000 தாதிமரை நியமிக்க முடிவு

நாடு முழுவதிலும் உள்ள அரசாங்க வைத்தியசாலைகளின் தாதிமார்களின் பற்றாக்குறையை நீக்குவதற்கு 15000 தாதிமார்களை இணைத்துக்கொள்வதற்கு சனாதிபதி தீர்மானித்துள்ளார் என சுகாதார அமைச்சர் சிறிபாலடி சில்வா தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாக சகல விபரங்களையும் திரட்ட வேண்டும் என சனாதிபதியால் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

# பிக்குகளுக்கு விசேட அடையாள அட்டை ஜாதிக ஹெல உறுமய வரவேற்பு

(கொழும்பு)

பௌத்த பிக்குகளுக்கு விசேட அடையாள அட்டைகள் வழங்குவதென்ற அரசாங்கத்தின் தீர்மானத்திற்கு ஜாதிக ஹெல உறுமய ஆதரவளிக்குமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளர் உடுவே தம்மலோகதேரர் இது குறித்துத் தெரிவிக்கையில்,


"மகாசங்க உறுப்பினர்களுக்கு விசேட அடையாள அட்டை வழங்குவதற்கான திட்டம் கொண்டு வரப்பட்டிருப்பதால் நாம் திருப்தியடைந்துள்ளோம்" எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வஞ்சகரிடமிருந்து மகாசங்கத்தினரின் கௌரவத்தைப் பாதுகாப்பதற்காக ஆட்பதிவுத் திணைக்களத்தின் உதவியுடன்இத் திட்டத்தை தாங்கள் ஆரம்பித்திருப்பதாகவும், நாடு முழுவதிலுமாக சுமார் 31,100 பௌத்த பிக்குகள் உள்ளதாகவும், புத்தசாசன அமைச்சின் செயலாளர் அபேயவிக்கிரம தெரிவித்திருப்பதாக 'டெய்லி நியூஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.

# சமாதான முயற்சிகள் வெற்றிபெற உதவுவதே ஜே.வி.பி.யின் செல்வாக்கு உயர வழி

ராவய சிங்கள இதழில் பேராசிரியர் ஜயதேவ உயன்கொட
மொழியாக்கம். அ.சக்திவேல்

விடுதலைப்புலிகளுடன் சனாதிபதி ஆரம்பிக்கப் போகும் சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்கு ஜே.வி.பி. எதிர்ப்புத் தெரிவித்ததன் காரணமாகவே சந்திரிகா அம்மையார் கட்சித் தலைமை பதவியிலிருந்து விலகினார். கட்சியின் தலைவியாக அல்ல; நாட்டின் சனாதிபதியாக இப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதே இவரின் தற்போதைய நோக்கமாக உள்ளது. இது வெற்றியிலா அல்லது தோல்வியிலா முடிவடையும்? என்பதை இன்னும் இரண்டொரு வாரங்களில் தெரிந்து கொள்ள முடியும்.



அடிக்கடி இப்பேச்சு வார்த்தைகளுக்கு ஜே.வி.பி. எதிர்ப்பு தெரிவிப்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. பேச்சுவார்த்தைகளின் நிகழ்ச்சி நிரல்களைத் தயாரிப்பதில் ஜே.வி.பி. யின் பங்களிப்பு இல்லாமல் முடியாதென்பது ஜே.வி.பியின் நோக்கமாக உள்ளது. அதாவது தங்கள் அரசியலை வளர்த்துக் கொள்வதற்கும், மேலும் வெற்றி இலக்குகளை நோக்கிச் செல்வதற்கும் அவர்கள் முயல்கின்றனர். இந்த நிகழ்ச்சி நிரல் தயாரிப்பின் மூலம் ஐக்கிய தேசியக் கட்சியினதும், சிறிலங்கா சுதந்திர கட்சியினதும் திட்டங்களை முழுமையாக மாற்றி அமைத்து தாங்களே நாட்டின் தலைமைப் பீடத்திற்குத் தகுந்தவர்கள் என பொது மக்களுக்கு காட்டுவதற்காகவே இந்த எதிர்ப்புக் கோசங்களைத் தெரிவிக்கின்றனர். ஜாதிக ஹெல உறுமய கட்சியை விடத்தாங்களே நாட்டுப்பற்றாளர்களும், சிங்கள மக்களின் காவலர்களும் என்ற சிறப்பான ஒரு நாடகத்தை அரங்கேற்றுவதே இவர்களின் முழு நோக்கமாக உள்ளது. மந்த புத்தி உள்ள ஜே.வி.பி. தலைவர்கள் இலங்கையில் ஆர்.எஸ்.எஸ். போலச் செயற்பட்டு, அரசியல் ஞானம் படைத்த சில தலைவர்களை மட்டம் தட்டி நாட்டுப்பற்றாளர் என்ற புகழாரத்தைச் சூட்டிக் கொண்டு, கலாசார அமைச்சின் ஊடாக நாட்டின் கலாசாரத்தை முழுமையாக மாற்றுவதே இவர்களின் முழு நோக்கமாக உள்ளது. ஆர்.எஸ்.எஸ். என்பது இந்தியா வில் உள்ள பி.ஜே.பி. கட்சியை விட மத வெறிபிடித்த கட்சியாகும்.

பாராளுமன்றத்தின் 40 ஆசனங்களையும் முக்கியமான அமைச்சுக்களையும், கூட்டுத்தாபன, அரச நிர்வாகங்களில் பதவிகளையும், அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் பதவிகளையும் தம்வசம் வைத்துக் கொண்டுள்ள ஜே.வி.பி. நல்ல காரியங்களை நாட்டுக்குச் செய்ய வேண்டுமானால் தற்பொழுது கூட்ட மைப்பில் இருந்து விலகவேண்டும. தற்போதைய சிங்கள மக்களின் ஆதரவைப் பெறுவதற்கு நாட்டுப் பற்றாளர்கள் என்று மக்களை ஏமாற்றாமல், சிங்கள இனவா தத்தை நாட்டில் தூண்டி விடாமல், நல்ல இடது சாரிக் கொள்கைகளை முன் வைக்க வேண்டும். அப்படி முன்வைக்காவிட்டால் தங்கள் கட்சியையும் அழித்து, நாட்டையும் குட்டிச் சுவராக்கும் நிலமைக்கே ஜே.வி.பி.யின் நடவடிக்கைகள் வழிவகுக்கும். இப்பொழுது ஜே.வி.பி. இந்தி யாவின் இடது சாரிகளுடன் இணைந்து, அவர்களின் அறிவுரைகளைக் கேட்டு, அதன்படி நடந்தால் ஜே.வி.பி. க்கு நல்ல எதிர்காலம் உண்டு. லசந்த விக்கிரமசிங்க, சுசந்தா குணதிலக்க, பிரட்ரிக்கா ஜேன்ஸ் என்பவர்களை மார்க்ஸிச இடது சாரிகள் என்று ஜே.வி.பி.யினா கூறிக்கொள்வது மார்க்ஸி சத்தை குழி தோண்டிப்புதைப்பதற்கும் சமமானதாகும். இவர்களை மார்க்ஸிசவாதிகள் என்று ஜே.வி.பி. கூறினால் ஜே.வி.பி. மார்க்ஸிச வாத இடதுசாரிக்கட்சி அல்ல. இவர்கள் சிங்கள இனவாதக் கட்சியாவர். இக்கட்சி ஏழை மக்களின் கட்சி அல்ல; இவர்கள் பணக்கார வர்க்கத்தை அரவ ணைத்துக் கொண்டு மார்க்ஸிசவாதத் தோலுக்குள் புகுந்து விளையாடுகின்றனர். அரசியல் ரீதியில் எதிர் காலத்தில் நாட்டை நல்லதொரு வழிக்குக் கொண்டு வரும் எண்ணம் ஜே.வி.பி. யினருக்கு கிடையாது. நாட்டு மக்களை ஏமாற்றி மக்களால் புரிந்து கொள்ள முடியாத திட்டங்களை முன்வைக்கின்றனர். உருப்படியாக ஜே.வி.பி. தன்னை அரசியலில் வளர்த்து கொள்ள வேண்டுமானால் நல்லதொரு சந்தர்ப்பம் ஜே.வி.பி.க்கு உண்டு. இந்தச் சமாதானப் பேச்சுவார்த்தைகளை குழப்பிவிடாமல் முழு ஆதரவைக் கொடுக்க வேண்டும். அப்படிச் செய்தால் ஜே.வி.பி.யின் வளர்ச்சியைத் தடுக்க முடியாது.

அதைத் தவிர்த்து உலக வங்கி, சர்வதேச நிதியம் போன்ற அமைப்புகளை விமர்சனம் செய்வதாலும், போத்துகீசர்-ஒல்லாந்தர் காலங்களில் நடந்தவைகளுக்கு நட்டஈடு கோருவதாலும், அமெரிக்க கலாசாரத்தை இழிவு படுத்துவதாலும், நோர்வே நாட்டவரை விரட்டி அடிப்போம் என்று கூக்குரல் இடுவதாலும் எந்தவித பிரயோசனமும் இல்லை. நாட்டில் முக்கியமான இனப்பிரச்சினைக்கு விடுதலைப்புலிகளுடன் இணைந்து செயல்பட்டால் நாட்டையும் மக்களையும் காப்பாற்றுவதுடன், அரசியலையும் வளர்த்து கொள்ள முடியும். இக்காரணங்களை ஜே.வி.பி. நினைத்தால் செய்யமுடியும். அப்படிச் செய்தால் சிங்கள மக்கள் ஜே.வி.பி. யினரை உண்மையான சிங்களத் தலைவர்களாக ஏற்றுக் கொள்வார்கள். இவற்றை ஜே.வி.பி.யினர் செய்வதாகத் தெரியவில்லை. இந்தியாவுக்கு நான் பல தடவைகள் சென்றுள்ளபடியால் அங்குள்ள இடதுசாரித் தலைவர்களைச் சந்திக்கும் சந்தர்ப்பங்கள் கிடைக்கும். ஜே.வி.பி.யினர் சிறுபான்மை தமிழ் மக்களின் உரிமைகளைக் கொடுப்பதற்கு ஏன் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்?. இவர்கள் இலங்கை நாட்டில் சுதந்திரமாக வாழ்வதற்கு ஜே.வி.பி.யினர் ஏன் தடை செய்கின்றனர்? சிங்கள பேரினவாதத்திலிருந்து ஏன் ஜே.வி.பி.யினருக்கு வெளியேற முடியாது? என அவர்கள் கேட்கின்றனர்.



கடந்த வாரம் இலங்கைக்கு வந்த இடதுசாரி இந்தியத் தலைவர்களான சீத்தாராம் சௌத்திரி இக் கேள்வியை என்னிடம் கேட்டார். சிறுபான்மை மக்களுக்கு உரிமைகளை வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் ஜே.வி.பி.யினரை நாங்கள் இடதுசாரிகள் என்று கூறமாட்டோம் என இந்திய இடதுசாரித் தலைவர்கள் கூறுகின்றனர். இவர்கள் நாட்டுக்கு நல்லது செய்யவேண்டுமானால் இந்தியாவுக்குச் சென்று அங்குள்ள இடதுசாரிகளைச் சந்தித்து அவர்களின் அறிவுரைகளைக் கேட்டு நடந்தால் இவர் களுக்கு அரசியல் விமோசனம் உண்டு. அப்படி இவர்கள் செய்தால் இனப்பிரச் சினைக்குத் தீர்வு காண்பதுடன் நாட்டின் கலாசாரத்தையும் மாற்றியமைத்து, அரசியலமைப்புச் சட்டத்தையும் மாற்றியமைக்கும் வல்லமையை மக்களிடம் இருந்து பெற்றுக் கொள்வார்கள்.

இடதுசாரிக் கொள்கைகளை ஜே.வி.பி கடைப்பிடிக்க வேண்டுமானால் அல்லது இடதுசாரிக்கொள்கைகளைப் பற்றிப்பிடிக்க வேண்டுமானால் சீத்தாராம் சௌத்திரி, பிரகாஷ்கரன், ரொமிலாதாபர், அசோக் மித்திரா, பர்தாசட்டர்ஜி பாண்டியன் போன்ற திறமை வாய்ந்த இடதுசாரிகளிடம் மார்க்ஸிசவாதத்தைப் படியுங்கள். இந்திய உயர்ஸ்தானிகள் காரியாலயத்துடன் தொடர்பு கொண்டால் இவர்களை இலகுவாகச் சந்திக்க முடியும். இதை ஜே.வி.பி செய்யுமா? நாட்டின் கலாசாரத்தையும், அரசியல் யாப்மையும் மாற்றுவதற்கு இவர்களுக்கு எண்ணம் கிடையாதா? மார்க்ஸிசவாதக் கொள்கைகளைக் கடைப்பிடித்து, மேற் கூறிய இடதுசாரிக் கொள்கைகளைக் கடைப் பிடிக்கும் தலைவர்களோடு இணைந்து செயற்பட்டால் இந்த நாட்டுப் பிரச்சினையை வெகு சுலபமாகத் தீர்த்துவைக்க முடியும்.

இலங்கை போன்ற ஒரு சிறிய நாட்டின் சரித்திரத்தைப் பின்னுக்குத் தள்ளிவிடாமல் எதிர்காலத்தில் நாட்டின் பிரச்சினையை எப்படித் தீர்க்க முடியும்? தீர்வுக்கு வழி என்ன? என்பதைச் சிந்தியுங்கள். போத்துக் கீசரிடமும், ஒல்லாந்தரிடமும் நட்டஈடு கோரி ஆணைக்குழு அமைக் காமல் நாட்டில் கொழுந்து விட்டெரியும் இனப்பிரச்சினைகளுக்கு உருப்படி யான நல்ல தீர்வைச் காண்பதற்கு முன் வாருங்கள். இவற்றைச் செய்வதற்கு விமல்வீர வன்ச டில்வின் சில்வா, விஜிதஹேரத் முன் வருவார்களா னால் இது நாட்டிற்கு தேடித்தந்த மாபெரும் வெற்றியாகும் வன்னிக்குச்சென்று விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகர னுடன் நேரடியாக கதைப்பதற்கு ஜே.வி.பி. யினருக்கு இடமுண்டு. விடுதலைப்புலிகளுடன் வெற்றிகரமான பேச்சு வார்த்தைகளை நடத்தி இனப்பிரச்சினைக்கு ஜே.வி.பி தீர்வுகண்டால் சிங்களச் செல்வந்தக் குடும்பங்களின் ஆதிக்கத்தில் சிக்கியிருக்கும் அரசியல் பாரம்பரியத்தை உடைத் தெறியலாம். இதுவே ஜே.வி.பி.யினருக்கு நான் கூறும் அறிவுரை.

## ஜே.வி.பி சமாதானத்துக்காகவே உள்ளது போருக்காக அல்ல என்கிறார் ரில்வின்

(கொழும்பு)

ஜே.வி.பி சமாதானத்திற்காகவே உள்ளது. போருக்காக அல்லவென்று ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

காலியில் நடந்த கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில;

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு அமைப்புக்கள் ஆட்சியில் ஒரு ஸ்தம்பித நிலையை உருவாக்க முயன்று கொண்டிருக்கின்றன. பொது மக்கள் இந்தத் தவறான நிலையைப் புரிந்து கொள்ள வேண்டும். நாட்டின் மேன்மைக்கும் ஒற்றுமைக்கும் ஆபத்தை உண்டாக்கும் வகையில் சமாதான நடவடிக்கை தொடர்பாக தவறான தீர்மானங்கள் எடுப்பதில் ஜே.வி.பி எந்த வகையிலும் பங்களிப்புச் செய்யாது.

2002 இல் விடுதலைப் புலிகளும் ஐக்கிய தேசியக் கட்சியும் செய்துகொண்ட உடன்படிக்கை நாட்டின் ஒற்றுமைக்கு தீங்குண்டாக்கும் அம்சங்களைக் கொண்டுள்ளது. 2004 இல் தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு இணங்க ஜே.வி.பி அதன் கொள்கைகளில் உறுதியாக நிற்கும்.

ஜே.வி.பி சமாதானத்திற்காகவே நின்றது. யுத்தத்திற்காக அல்ல. ஆனால் யாருக்கும் கீழ்ப்படியாது. தற்போதைய சங்கடமான சூழ்நிலையில் நேர்மையான சமாதானமே நாட்டுக்குத்தேவை என்றும் ரில்வின் சில்வா கூறியுள்ளார்.

## இடைக்கால த.அ.யோசனைக்கு எதிராக பிக்குமார் பேரணி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனையை எதிர்த்து தேசிய பிக்குமார் முன்னணி பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நிகழ்வொன்றை நடத்தியுள்ளது.இந் நிகழ்விற்கு முன்னர் பொரளைச் சந்தியில் இருந்து பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபம் வரைபேரணி ஒன்றையும், தேசிய பிக்குமார் முன்னணி நடத்தியுள்ளது.இதன் போது இலங்கையில் அமைதி முயற்சிகளுக்கான நிரந்தரத் தீர்வு காணப்படவேண்டும் அதற்கிடையில் ஓர் இடைக்காலத் தீர்வை தாங்கள் ஒருபோதும் விரும்பவில்லை என்ற கருத்தை அங்கு உரையாற்றிய பலர் வலியுறுத்திக் கூறினர். (32)

### மதமாற்றத் தடைச் சட்டம் குறித்து

## அமெ.பதில் தூதுவருடன் ஜாதிக ஹெல உறுமய சந்திப்பு

ஜாதிக ஹெல உறுமயவினருக்கும் சிறிலங்காவுக்கான அமெரிக்க பதில் தூதுவருக்குமிடையில் கடந்த 23 ஆம் திகதி சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

இச் சந்திப்பின் போது கட்சியின் தலைவர் எல்லாவல மேதானந்த தேரர்,உடுவே தம்மாலோக உதய கமன்பில ஆகியோர்கலந்து கொண்டனர். இதன்போது அமெரிக்க புதிய தூதுவர் ஹெல உறுமய சமர்ப்பித்த மதமாற்றத் தடைச்சட்ட மூலம் தொடர்பில் கருத்துக்களை கேட்டறிந்தார். அத்துடன் இது ஒரு அடிப்படை மனித உரிமை மிறலா? என்று கேட்டதற்கு எந்த வகையிலும் தனி நபர் ஒருவரைப் பாதிக்காது என தேரர் தெரிவித் துள்ளார்.

அதே தினம் ஹெல உறுமய குழுவினர் மதமாற்றத் தடைச் சட்டம் தொடர்பாக பாகிஸ்தான், பங்களாதேஷ் தூதர்களையும் சந்தித்து உரையாடியுள்ளனர்.

## இரண்டாம் நிலைக் கல்வியை அபிவிருத்தி செய்ய நிதியுதவி

(கொழும்பு)

சிறிலங்கா கல்வி அமைச்சின் 'இரண்டாம் நிலைக்கல்வியை நவீனப் படுத்தும் திட்டத்திற்' கென'ஆசிய அபிவிருத்தி வங்கி ஐயாயிரம் மில்லியன் ரூபாய்களை வழங்கவுள்ளது.மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு அதாவது 2010 ஆம்ஆண்டு வரை இத்திட்டத்தை விரிவுபடுத்துவதற்காகவே இந்நிதி வழங்கப்படவுள்ளது.தகவல் தொழில்நுட்ப அபிவிருத்திக்கான பிரதான பங்குடன் அரசாங்கப் பாடசாலைகளில் இரண்டாம் நிலைக் கல்வித் துறையின் நவீனத்துவத்திற்கான மேற்படி திட்டம் 2001ஆம் ஆண்டு 7600 மில்லியன் ரூபா நிதியுடன் ஆரம்பிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்வதற்கான வாய்ப்புக்கள் அருகி வருகின்ற இவ்வேளை சிறிலங்கா அரசின் இராணுவ முனைப்புக்கள் வடக்கு- கிழக்குத் தமிழர் பகுதிகளில் அதிகரித்து வருவதனை கள நிலவரங்கள் காட்டுகின்றன. மீண்டும் போர் ஆரம்பிக்கப்பட்டு விடுமோ என அச்சம் கொண்டுள்ள சமாதான விரும்பிகளின் சந்தேகத்தை உறுதிப் படுத்துவது போல் இராணுவ முனைப்புகளை சிறிலங்கா அரசு முடுக்கிவிட்டிப்பது தெளிவாகவே தெரிகிறது.

வடக்குப் பகுதிகளில் குறிப்பாக யாழ்.குடாநாட்டில் நிலைகொண்டுள்ள படைகள் தம் பாதுகாப்பு முன்னரங்கப் பகுதிகளைப் பலப்படுத்தி வருகின்றனர்.

யினர் ,முகமாலை சோதனைச் சாவடி ஊடாக பயணிக்கும் பயணிகளை நோட்டமிட்டு விசாரணை செய்யும் நடவடிக்கையினையும் தீவிரப்படுத்தியுள்ளனர். இதுஒரு புறமிருக்க, படையினருக்கான புதிய இராணுவப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதனையும் அறியமுடிகிறது.

கடற்கரையோரங்களில் புதிது புதிதாக முளைக்கும் இராணுவ காவலரண்கள் மக்கள் மத்தியில் பீதியை உருவாக்கி வருகிறது. புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வருவதற்கு முன் இல்லாத காவலரண்கள் தற்போதைய சமாதான கர்லத்தில் அதிகரித்து வருவதானது, சமாதானத்தின் ஆயுள் ரேகையை பலவீனப்படுத்தும் செயற்பாடாகவே நோக்கப்படுகிறது.

காரணமாகக் கொள்ளப்படுவது இராணுவம் தன் பந்தோபஸ்த்து நிலையைத் தயார் நிலைப் படுத்துவதாகவே பொருள்படும். இந்தநிலையில் சிறிலங்கா

ருக்கு உற்சாகம் ஊட்டிச் சென்றிருக்கிறார். அத்துடன் இராணுவ முன்னரங்கத்தில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்கள் தொடர்பாகவும் படை உயர்அதிகாரிகளுடன்



தாயகத்தின் ஒரு பிரசித்தமான இடம் என்பதை விட இலங்கைத் தீவின் பிராந்திய விடயங்களில் பெரும் முக்கியத்துவம் வகித்து வந்திருக்கின்றமை வரலாற்று உண்மை.

இலங்கைத்தீவை ஆட்சி செய்த அந்நியர்கள் திருகோணமலைத்துறை முகத்தைத்தமது முக்கிய துறைமுகமாக வைத்து பல நன்மைகளைப் பெற்றனர் என்பதற்கு நிறையவே சான்றுகள் உண்டு. அப்படிப்பட்ட இத்துறைமுகம் தற்போதைய காலகட்டத்திலும் சர்வதேச நாடுகளின் கரிசனைக்குரிய ஒன்றாக இருந்து வருகின்றது. குறிப்பாக அமெரிக்கா, இந்தியா,போன்ற நாடுகள் இத் திருகோணமலைத் துறைமுகத்தில் தமது செல்வாக்கைச் செலுத்த முனைப்புக்காட்டி வருகின்றன. அதனடிப்படையில் இந்தியா இத்துறைமுகத்தை அண்டிய பகுதியில் தமது எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை அமைத்துச் செயல்பட்டு வருகின்றது.

# சமாதான விரும்பிகளுக்கு அச்சமூட்டும் இன்றைய களச் சூழ்நிலை

முத்தையனூர் ப.துஷ்யந்தன்



அடுத்த விடயமாக இராணுவக் கட்டமைப்பில் ஏற்படுத்தப்பட்டு வருகின்ற மாற்றங்களைக் குறிப்பிடலாம். அண்மையில் யாழ்.குடாநாட்டிற்கான புதிய இராணுவக் கட்டளைத் தளபதியாக மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஒரு நாட்டில் இராணுவக்கட்டுமானத்தில் மாற்றம் ஏற்படுவதற்கு முக்கிய

பதுங்கு குழிகள் அமைப்பதிலும் புதிய பாதுகாப்பு வேலிகள் அமைப்பதிலும் ஈடுபட்டுள்ள படை

இராணுவக்கட்டமைப்பில் ஏற்படுத்தப்படுகின்ற மாற்றங்கள் சந்தேகத்துடனேயே நோக்கப் படுகின்றன.

அடுத்து பிரதிப் பாதுகாப்பு அமைச்சரின் இராணுவ நிலைகள் நோக்கிய விஜயங்கள் பல சந்தேகங்களைத் தோற்றுவித்திருக்கின்றன.

கடந்த 23ஆம் திகதி சிறிலங்கா பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் இரட்ணசிறி விக்கிரமநாயக்க வவுனியா மாவட்டத்திற்கும், மன்னார் மாவட்டத்திற்கும் விஜயம் செய்து ஓமந்தை, தள்ளாடி உள்ளிட்ட இராணுவ முன் அரண்களைப் பார்வையிட்டுப் படையின

கலந்தாலோசித்துச் சென்றிருக்கிறார். இவ்வாறான சம்பவங்கள் ஒருபுறமிருக்க சர்வதேசத்தில் புலிகளைக் கொச்சைப்படுத்துவதற்காக சிறிலங்கா அரசானது திட்டமிட்டுச் சில பொய்ப் பரப்புரைகளை மேற்கொண்டு வருகிறது.

“திருகோணமலைத்துறை முகத்தைச் சூழ விடுதலைப்புலிகள் பாதுகாப்பு அரண்களை அமைத்து வருகின்றனர். இது போர்நிறுத்த உடன்படிக்கைக்கு மாறானது” என்ற பரப்புரையினைச் சிறிலங்கா அரசும், படைகளும் திட்டமிட்டு மேற்கொண்டு வருகின்றன. இதன் பின்னணி பற்றிப்பார்ப்பதாயின் சற்று ஆழமாக சில விடயங்களை ஆராய வேண்டும். திருகோணமலைத் துறைமுகமானது தமிழர்

அமெரிக்காவும் இதுகுறித்து ஆர்வம் காட்டி வருகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் இத்திருகோணமலைத்துறை முகத்திற்கு புலிகளால் ஆபத்து என கூச்சலிடுவதன் மூலம் புலிகளுக்கு எதிராக சர்வதேச எதிர்ப்பு நிலைப்பாட்டைக் கொண்டு வரமுடியும் என சிறிலங்கா அரசதரப்பு கருதியதால் தான் இந்தப் பரப்புரையை மிகத் தீவிரமாகப் பரப்பி வருகின்றது என்று கூறுவதற்கு பலமான காரணங்கள் இருக்கின்றன.

இப்படிப்பட்ட அபாயகரமான இராணுவச் சூழ்நிலையில் சமாதான விரும்பிகளின் அச்சம் தவறான ஒன்றெனக் கூறிவிட முடியாது.

# கண்டாவளை உழவனூரில் நியாப் அபிவிருத்தித் திட்டங்கள்



(அலுவலக செய்தியாளர்)

நியாப்திட்டத்தின் பகுதிI செயற்பாடுகளில் கண்டாவளைப் பிரதேச உழவனூர் கிராமத்திற்கு 6 இலட்சம் ரூபா பெறுமதியான பொது மண்டபம் உட்பட பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

நியாப் பகுதி I திட்டத்தின் 2003ஆம் ஆண்டு வேலைத் திட்டத்தின் கீழ் உழவனூர் பகுதி பின்தங்கிய கிராமங்களில் ஒன்றாகத் தெரிவுசெய்யப்பட்டு அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனடிப்படையில் 6 இலட்சம் ரூபா பெறுமதியான பொது மண்டபம், பொதுக்கிணறுகள் என்பவற்றை அமைத்துவரும் இதேவேளையில் வீதிப்புனரமைப்புப் பணிகளையும் அத்திட்டத்தினர் மேற்கொண்டு வருகின்றனர். இவ் வீதி புனரமைப்பில் மக்கள் பங்களிப்பு வேலைகளில் அப்பகுதி மக்கள் மிகவும் ஆர்வத்துடனும், உற்சாகத்துடனும் செயற்பட்டு வருகின்றனர். அத்தோடு நியாப் திட்டத்தின் மற்றுமொரு அங்கமாக வறுமைப்பட்ட மக்களுக்கான கடன் திட்டமாகிய ஜீவனோபாய ஆதார செயற்பாட்டுக் கடன் திட்டமும் இங்கு நடைமுறைப்படுத்தப்பட்டு, மக்களுக்குப் பல்வேறு தொழில் வாய்ப்புக்களுக்கான கடனுதவிகளும் செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(ச)

## -புதுக்குடியிருப்புப் பகுதிக்கு-

# மின்சாரம் வழங்குவதற்கான வேலைகள் நடைபெறவில்லை

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பில் மின்சாரம் வழங்குவதற்கான ஆரம்ப வேலைகள் நடைபெறவில்லை என முல்லை மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

மின்சார விநியோகத்திற்கென தெருக்களில் நிழல்பரப்பி நின்ற பலமரங்களும், பயன்தருமரங்களும் வெட்டி அகற்றப்பட்டுள்ளபோதும் இதுவரை அதற்கான வேலைகள் எதுவும் நடைபெறாமை குறித்து அப்பகுதிமக்கள் கவலையடைந்துள்ளனர். (20)

# குடிநீருக்கு தட்டுப்பாடு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி இராமநாதபுரம் பகுதியில் குடிநீருக்குத் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. இராமநாதபுரம் பகுதியில் ஆலடி, புதிய சிவிக்செனர்ர், நலன்புரி நிலையம் போன்ற இடங்களில் பெருமளவு குடிநீர்த் தட்டுப்பாடு நிலவிவருவதாகக் கிராமசேவையாளர் கூறினார். குடிநீருக்குத் தட்டுப்பாடான இடங்களில் இருந்து இரண்டு அல்லது மூன்று கிலோமீற்றர் தூரத்தில் இரண்டு கிணறுகள் மட்டுமே உள்ளன. அக்கிணற்றடியில் எல்லா மக்களும் நீர் அள்ளச் செல்வதனால் பல அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (12)

# விநாயகர் சேமிப்பு கடன்குழு அலுவலக கட்டடத் திறப்பு விழா

விசுவமடு மேற்கு, நாச்சிக்குடா கிராமத்தில் விநாயகர் சேமிப்பு கடன் குழு புதிய கட்டடத்திறப்பு விழா கடந்த சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சேமிப்பு கடன்குழுத் தலைவி பா.கோகிலா தலைமையில் நடைபெற்றது.

மங்கல விளக்கை கிராம சேவகர் ச.குருகுலசிங்கம் ஏற்றினார். தமிழீழ தேசியக் கொடியை விசுவமடுப் பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் பு.திலகன் ஏற்றினார்.விநாயகர் சேமிப்புக் குழுக்கொடியை கெயார் நிறுவன உத்தியோகத்தர் ம.சிவாஜினி ஏற்றினார்.

தொடர்ந்து கட்டடப் பெயர்ப் பலகையை சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனப் பணியாளர் அகிலன் திரைநீக்கம் செய்து வைத்தார். புதிய கட்டடத்தினை புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் தயானந்தா நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

வரவேற்புரையை பொருளாளர் சி.மலர்விழி நிகழ்த்தினார். ஆசியுரையை கிராம தே.எ. பேரவை செயலாளர் குமாரசாமி நிகழ்த்தினார். சிறப்புரையை கிளி. மாவட்ட பெண்கள் மேம்பாட்டுத் தலைவி திருமதி தேவாம்பிகை, காசிநாதன் நிகழ்த்தினார். (14)

## -மக்கள் வங்கியில்-

# எழுதுவினைஞர் பயிலுனர்களுக்கு விண்ணப்பங்கள் கோரல்

(அலுவலகசெய்தியாளர்)

மக்கள் வங்கியில் எழுது வினைஞர் பயிலுனர்களுக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பெற்று வருவதாக கிளிநொச்சி மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர் செ.பாலராஜா தெரிவித்துள்ளார். மேற்படி ஆட்சேர்ப்புக்கான விண்ணப்ப முடிவுத்திகதி 03.09.2004 எனவும், இதற்கான விண்ணப்பப்படிவங்கள் மற்றும் விபரங்களை சகல மக்கள் வங்கிக் கிளைகளிலும் அலுவலக நாட்களில் பெற்றுக்கொள்ளலாமெனவும் தெரிவித்துள்ளார். (சோ,கு)

# நிகொட் திட்டத்தின் கீழ் அடம்பன் பாடசாலைக்கு ஆய்வுகூடம்

வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டமான “நிகொட்” நிறுவனம் மன்னார், அடம்பன் மத்திய மகாவித்தியாலயத்திற்கு க.பொ.த.உ/த மாணவர்களின் நலன்கருதி விஞ்ஞான ஆய்வு கூடமொன்றையும் முசலி பெரிய புள்ளச்சி பொற்கேணியில் கமநல சேவை நிலையமும், உர களஞ்சியமும் கட்டுவதற்கு 8மில்லியன் ரூபாவினை ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த வேலைத்திட்டத்தினைத் தனியார் ஒப்பந்தம் மூலம் செய்வதற்காக மன்னார் அரசாங்க அதிபர் கேள்வி அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளார். (மி)

உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு
வடக்கு கிழக்கு மாகாண சபை

**வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம்**
**[NECORD]**
ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
"ஆஅவ" கடன் இல. 1846 – **SRI(SF)**

# கேள்வி அறிவித்தல்

## கட்டட நிர்மாண வேலைகளைப் பெறுதல்

01.வடக்கு கிழக்கு சனசமூக புனருத்தாரண அபிவிருத்தி கருத்திட்டத்தின் (NECORD)ஆகு செலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து (ஆஅவ) கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள குடிசார் வேலைக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. இதன் பின்னகத்து தொழில்தருனராக குறிப்பிடப்படும் NECORD கருத்திட்டத்தின் கருத்திட்டப்பணிப்பாளர் சார்பாக மன்னார் மாவட்ட கேள்விச் சபையின் தலைவர் பின்வரும் ஒப்பந்த வேலைக்கு தகுதிவாய்ந்த கூறுவிலையிடுவோருடமிருந்து பொறிவைக்கப்பட்ட கூறுவிலைகளைத் தற்போது கோருகின்றார்.

**அட்டவணை**

| இல | ஒப்பந்த இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த **ICTAD** பதிவு | கூறுவிலை பிணைப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | MN/NECORD/ED/18 | அடம்பன் மத்தி மகாவித்தியாலயத்திற்கு60'x25' க.பொ.த.உயர்தர விஞ்ஞான ஆய்வுகூடம் அமைத்தல் | M7 கட்டடநிர்மாணம் | 23,000/= |
| 02 | MN/NECORD/AG/05 | பெரியபுள்ளச்சி பொற்கேணி கமநல சேவைநிலையம் உரக்களஞ்சியம்,வாகனத்தரிப்பு அறை என்பன புனரமைத்தல். | M6 கட்டடநிர்மாணம் | 53,000/= |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ள சகல ஒப்பந்தக்காரர்களும் கூறுவிலை கோரலாம்.

I. நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவன.ந்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிருமாண ஒப்பந்தகாரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட துறைசார் தரமொன்றில் ஒப்பந்தகாரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்த காரர் சங்கத்தின் ( இ.தே.நி.ஒ.ச.) உறுப்பினராக ('ICTAD' இல் மேற்படி M7இற்கு மேலான பதிவு பெற்றவர்களுக்கு மட்டும் ) இருக்க வேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது இருஒத்த தன்மையிலானஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன், கடந்த ஐந்து வருடங்களின் போது மேற்கொள்ளப்பட்ட வேலையில் செய்யப்பட்ட திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் ஆதாரப்படுத்தப்படல் வேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்றை வழங்குமாறு கூறுவிலையிடுவோர் வேண்டப்படுகின்றனர்.

IV. 'இக்டாட்' வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கூறுவிலை ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

V. மோசடியான, அல்லது வஞ்சனையான நடவடிக்கைகள், அல்லது திருப்திகரமற்ற வேலைகள் என்னும் காரணங்களுக்காக தகுதியற்றவர் என பிரகடனப்படுத்தப்பட்டவர்.

VI. கூறுவிலை ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் நாளது திகதிவரை புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.

04. இதன் தொடர்பாக பந்தி இரண்டில் உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்த காரர்கள் கூறுவிலையிடமுடியும். ஒவ்வொரு ஒப்பந்தவிடயமும் புறம்பானதொரு கேள்வியாக அமையவேண்டும்.ஏதாவது ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை வடக்கு கிழக்கு சமூக புனருத்தாரண அபிவிருத்தித்திட்டத்தின் (NECORD) கீழ் தற்பொழுது செயற்படுத்திக்கொண்டிருக்கும் ஒப்பந்தவேலைகள் உட்பட மூன்றாக இருக்கும்

05. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் மேலும் தகவல்களை வடக்கு கிழக்கு சமூகபுனருத்தாரண அபிவிருத்தித்திட்டம் (NECORD) மன்னார் அலுவலகத்தில் வேலைநேரங்களில்பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் கேள்வி சம்பந்தமான ஆவணங்களையும் பரிசீலனை செய்யலாம். தொலைபேசி 023-223103, தொலைநகல் 023-2233103, ஈமெயில் distmnr@sltnet.lk.

06. கேள்வி ஆவணங்களை24.08.2004இலிருந்து 09.09.2004 வரை காலை 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 மணிவரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து ரூபா 1000/= மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

07. முன்கூட்டியே கேள்விக்கூட்டமொன்று 10.09.2004 காலை 10.00மணிக்கு கச்சேரியில் நடைபெறும்.

08. கேள்விகோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும், இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட விலையிடப்பட்ட கேள்வி விலையையும் கேள்வி விலைகொண்டிருக்க வேண்டும் என்பதுடன், பந்தி ஒன்பதில் குறிப்பிட்டுள்ளஇடம் திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கப்படவேண்டும்.

09. பொறிவைத்த கேள்விகள் தலைவர், மாவட்ட க் கேள்விச்சபை, NECORD, மாவட்ட திட்ட அலுவலகம், கச்சேரி, மன்னார் என்ற விலாசத்துக்கு 17.09.2004 மாலை 2.00மணிக்கு முன்பாக கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

10. கூறுவிலைகளின் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கூறுவிலையிடுவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகு செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருனர் பொறுப்பாக விளங்கமாட்டார்.

**வே.விசுவலிங்கம்,**
**தலைவர்,**
**மாவட்டகேள்விச்சபை/அரசாங்க அதிபர்,**
NECORD **திட்டம், மன்னார்.**

(சி-10096)

# ஏழாமாண்டு நினைவாக...



முத்தாக 15 12 1973

வித்தாக 26 08 1997

## கப்டன் கோகிலா

மாலதி படையணி
(இராசேந்திரம் மைதிலி)

விடுதலையின் பேரொளியில்
நீயும் ஒரு நட்சத்திரமானாய்
தினமும் வானில் தெரிகிறது நின்முகம்,
உனது புன்னகையையும் அன்பையும்
நம்மிடம் தந்தபடி.

ஜெயசிக்குறு எதிர்ச்சமரில் இவருடன்வீரச்சாவடைந்த அனைவருக்கும் எமது வீரவணக்கங்கள் உரித்தாகட்டும்.

சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

குடும்பத்தினர்
தகவல்: இ.முரளீதரன்
(பிரான்ஸ்)

(5000)

# ரட்ணசிறியின் குற்றச்சாட்டுக்கு கண்காணிப்புக் குழு மறுப்பு

ஸ்கண்டிநேவிய நாடுகளைச் சேர்ந்த கண்காணிப்புக் குழுவினர் தமது பணிகளை சரிவரச் செய்யாது செயற்பட்டு வருவதாக சிறிலங்காவின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க குற்றம் சுமத்திய குற்றச்சாட்டுக்குப் பதிலளித்த கண்காணிப்புக் குழு அவருடைய குற்றச்சாட்டை ஆணித்தரமாக மறுத்திருக்கிறது.

இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் உப தலைவர் ஹொக்ரப் ஹாக்லன்ட் கருத்து தெரிவிக்கும் போது, தவறான குற்றச்சாட்டுக்கள் எங்கள் மீது சுமத்தப்படுவதையிட்டு நாங்கள் விரக்தி அடைத்திருக்கிறோம் என்று கூறியிருக்கிறார். அமைச்சரின் குற்றச்சாட்டில் கண்காணிப்புக் குழு தமது கடமையைச் சரிவரச் செய்யாத காரணத்தினால் நாடு இரண்டாகப் பிளவுபட்டிருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டதற்கு ஹாக்லன்ட் பதிலளிக்கும் போது, நாங்கள் இங்கே வந்திருப்பது இலங்கைக்கு ஏற்படும் சகல தகராறுகளையும் தீர்த்து வைக்கும் அதிகாரத்துடன் அல்ல. அரசாங்கத்தினதும் விடுதலைப் புலிகளினதும் வேண்டுகோளுக்கு இணங்க அவர்களது புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையிலிருந்து மீறப்படும் சம்பவங்களை விசாரணை செய்வதற்கு என்பதை வலியுறுத்தியிருக்கிறார். சமீபகால போர் நிறுத்த மீறல் நடவடிக்கைகள் நடைபெற்றிருப்பது கிழக்கிலங்கையில் உள்ள வெருகல் மற்றும் அம்பாறைக்கும் இடைப்பட்ட கடலோரப் பகுதிகளிலாகும். இந்த சம்பவம் நடைபெற்ற பகுதிகள் இலங்கை அரசின் கட்டுப்பாட்டின் கீழ்வரும் பகுதிகள் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## சர்வசன வாக்கெடுப்பிற்கு அரசு முயற்சி

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறை மாற்றி அமைப்பது மற்றும் தேர்தல் முறைகளை மாற்றி அமைப்பது சம்பந்தமாக சர்வசன வாக்கெடுப்பொன்றை நடத்துவதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன. தொகுதிவாரியான தேர்தல் முறையை மீண்டும் அமுற்படுத்த அரசாங்கம் புதிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

என்று லங்காதீப செய்தி வெளியிட்டுள்ளது.

## தவறவிடப்பட்டது

போக்குவரத்துக்கண்காணிப்புப் பிரிவின் மோட்டார் ஊர்திப் பகுதிக்கு உரிய 01-100, 147-150, 640-650, 840-850, 952-1000,1201-1350, 1951-2000, 2801-2850 ஆகிய தொடர் இலக்க பற்றுச்சீட்டுக்கள் தவறவிடப்பட்டுள்ளன.

இவற்றைக் கண்டெடுத்தவர்கள் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் பிரதேச செயலகங்களில் ஒப்படைக்குமாறு கேடடுக் கொள்கின்றோம்.

நிர்வாகம்,
போ.க.பிரிவு.

(4989)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி...

தோற்றம் 10 04 1929

மறைவு 28 07 2004



## அமரர் கந்தையா பேரம்பலம்

(முள்ளியவளை)

விடுதலை வேள்வியில்
கலைஞனாய் இருந்தவர்
வேர்வையின் பொழுதிலே
விசிறியாய் இருந்தவர்
கண்ணிலே எய்வும்
கனவுகள் சுமந்தவர்.
மண்ணை விட்டு
நீங்கினார் கலங்கினோம்.

"இவரின் இழப்பினால் துயருறும் அனைவருக்கும் எமது ஆறுதல்கள்."

அஞ்சலியுடன்,
நிதர்சன நிறுவனம்.

(4906)

# நீங்காத நினைவுகளுடன் நாலாண்டுகள்

மலர்வு 1920 06 02

உதிர்வு 2000 08 26



ஓய்வு பெற்ற பாடசாலை அதிபர், தமிழறிஞர், முதுபெரும் கலைஞர்

## அமரர் கிறகோரி ஏற்வேட் மிராண்டா

வங்காலை, மன்னார்

எங்கள் குடும்பத்தின் தன்னிகரில்லாத் தலைவா
தரணியில் நின்புகழை சாற்றுவதற்கு நாவுமுண்டோ
பங்கம் வருமுன்னே பரமனடி சேர்வதற்காய்.
பாங்காக நீ எழுந்து பத்திரமாய் சென்றனையோ.

பத்தரை மாற்றுப் பசும் பொன் பண்பட்ட தூய உள்ளம்
பார்ப்போர் வியந்து நிற்க பாரினிலே நீ திகழ்ந்தாய்.
இத்தரை மீதினிலே இயலாதது இல்லை என்று
எத்திக்கும் நீ சென்று இனிய கல்விப் பணி புரிந்தாய்.

நம்பவே முடியவில்லை எண்பது ஆண்டுகள் வரை
நானிலத்தில் நீ புரிந்த தமிழ்ப் பணியை என்ன சொல்வோம்
கம்பனுடன் வள்ளுவனும் கண்ணதாசன் பாரதியும்
கனியவர்களின் பேச்சினிலே நாம் அறிந்து வியந்து நின்றோம்.

தூய வெள்ளை ஆடையுடன் கம்பீரமாக நடந்து வந்தாயே
ஆர்வத்துடன் எமக்களித்த அழியாத செல்வங்களை மறக்கவில்லையே
நோய் வரும் கால் எம்மை அணைத்து சுகம் தந்தாயே
மறக்கவும் முடியவில்லையே ஐயா, எங்கள் இதயக்கமலமே

கண்ணீர்த் துளிகளால் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.
கவலை கொண்டு நெஞ்சம் உருகி நிற்கின்றோம்.
எமக்குச் செய்த செயற்கரிய நலன்களை
மறவாது நின் வழியில் நடந்திடுவோம்.

இறைவா! இவருக்கு நித்திய இளைப்பாற்றியை அளித்தருளும்.

மனைவி, மக்கள்,பேரப்பிள்ளைகள்,உற்றார், உறவினர்.

தகவல்:-
சந்திரா மிராண்டா
மன்னார்

(சி-10091)



பெண்களுக்கான தடை ஓட்டத்தில் தடைச் சட்டத்தில் தடுக்கி விழுந்து கீழே இருக்கும் கனடாவின் பேர்டிறா பெலிசீன்.

பெண்களுக்கான 200 மீற்றர் போட்டியில் தங்கம் வென்ற அமெரிக்காவின் அலிசன் பீலிக்ஸ்






பெண்களுக்கான 100 மீற்றர் இறுதிப் போட்டியில் தங்கம் வென்ற அமெரிக்காவின் ஜோஅனா ஹேய்ஸ்.




ஆண்களுக்கான தட்டெறிதலில் தங்கம் வென்ற கங்கேரியின் றொபேட் பசாக்கஸ்.

ஆண்களுக்கான 3000 மீற்றர் ஓட்டத்தில் தங்கம் வென்ற கென்யாவின் எஷிகியல் கெம்போ




# உலக சம்பியனைத் தோற்கடித்து காலிறுதிக்கு முன்னேறியது சீனா!



ஒலிம்பிக் கூடைப்பந்தாட்டத்தில் காலிறுதிச் சுற்றுக்கு முன்னேறி சாதனை படைத்துள்ளது சீனா திங்கட்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் சீனா 67-66 என்ற புள்ளிக் கணக்கில் உலக சாம்பியன் செர்பியா மற்றும் மான்டெனெக்ரோ அணியை அதிர்ச்சித் தோல்வியுறச் செய்தது. சீன வீரர் யாவோ மிங் அற்புதமாக ஆடி 27 புள்ளிகளைக் குவித்ததுடன் 13 ரீபவுண்டுகளையும் சேகரித்து வெற்றியில் பெரும் பங்காற்றினார் இன்று நடைபெறும் காலிறுதி ஆட்டத்தில் வெற்றி பெற்று விட்டால் பதக்கப் போட்டியில் சீனா விளையாடும் இது வரையிலான ஒலிம்பிக் போட்டிகளில் இதுவே சிறந்த முன்னேற்றமாகவும் சீனாவுக்கு அமைந்துள்ளது. 1996 இல் நடைபெற்ற போட்டியில் 8 ஆவது இடத்தைப் பிடித்ததே இதற்கு முன்பு வரையிலான அதிகபட்ச முன்னேற்றமாகும்.

# பெண்கள் கால்பந்து இறுதிப்போட்டி அமெரிக்க - பிரேசில் அணிகள்



எதென்ஸ் ஒலிம்பிக் போட்டியின் பெண்கள் கால்பந்து போட்டியின் இறுதிப்போட்டியில் விளையாட பிரேசில் அமெரிக்க அணிகள் தகுதி பெற்றுள்ளன. அரையிறுதி ஆட்டம் ஒன்றில் பிரேசில்-சுவீடன் அணிகள் மோதின இதில்1-0 என்ற கோல் கணக்கில் பிரேசில் வெற்றிவாகை சூடியது. மற்றொரு அரையிறுதியில் அமெரிக்கா, ஜேர்மனி அணியை எதிர்கொண்டது. இதில் 2-1 என்ற கணக்கில் ஜேர்மனியை வீழ்த்தி அமெரிக்கா இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது.



# கிரீஸ் வீராங்கனை தற்கொலை

காதலனுடன் ஏற்பட்ட தகராறில் 3ஆவது மாடியிலிருந்து கீழே குதித்து கோமா நிலையில் இருந்த கிரீஸ் ஜூடோ வீராங்கனை எலினி லோவானோவ் (வயது-20) 17 நாட்களுக்குப் பிறகு செவ்வாய்க்கிழமை உயிரிழந்தார். லோவானோவைத் தொடர்ந்து அவருடைய காதலனும் அதே 3ஆவது மாடியிலிருந்து கீழே குதித்தார். தற்போது அவர் சிகிச்சை பெற்று வருகிறார்.

# ஜான்சன் இடத்தில் வேர்னர் 400 மீற்றர் ஓட்டத்தில் தங்கம்



அமெரிக்க தடகள ஜாம்பவான் மைக்கேல் ஜான்சன் விட்ட இடத்தைப் பூர்த்தி செய்திருக்கிறார். ஜெரமி வேரினர் 400 மீற்றர் ஓட்டத்தில் இவர் அபாரமாகத் தங்கம்வென்றார்.

ஒலிம்பிக் 400 மீற்றர் ஓட்டம் என்றாலே அமெரிக்க ஜாம்பவான் வீரர் மைக்கேல் ஜான்சன் நினைவுதான் அனைவருக்கும் வரும்புயல்வேகத்தில் ஓடிப் பதக்கங்களை அள்ளிவிடுவார். 1996 (அட்லாண்டா), 2000(சிட்னி) ஒலிம்பிக் போட்டிகளில் 400 மீற்றர் ஓட்டத்தில் தங்கம் வென்றவர் ஜான்சன் அவரது ஓய்வுக்குப் பிறகு பூர்த்தி செய்யப்படாமல் இருந்த அவரது இடத்தை நிரப்பியிருக்கிறார் மற்றொரு அமெரிக்க வீரர் ஜேர்மி வேரினர்.

எதென்ஸ் ஒலிம்பிக் 400 மீற்றர் ஓட்டத்தில் கடந்த திங்களன்று அபாரமாக ஓடித் தங்கம் வென்று சாதித்திருக்கிறார் வேரினர். 400 மீற்றர் ஓட்டத்தை 46.10 வினாடிகளில் கடக்கும் இவர் அமெரிக்க தடகள உலகைப் பொறுத்த வரை அவ்வளவு பிரபலம் இல்லை.ஆனால் எதென்ஸ் ஒலிம்பிக்கில் இவரது வேகம் பார்ப்பவர்களை மிரட்டி விட்டது. 44வினாடிகளில் இலக்கை எட்டி தங்கம் கைப்பற்றியிருக்கிறார். இவருடன் சேர்ந்து அமெரிக்க வீரர்களேவெள்ளி (ஓடீஸ் ஹாரிஸ்), வெண்கலம்(டெரிக்புரு) கைப்பற்றியுள்ளனர்.

## புதிய சாதனை



எதென்ஸ்சில் நேற்று முன்தினம் நடைபெற்ற பெண்களுக்கான போல்வால்ட் பிரிவில் ரஷ்ய வீராங்கனை எலினா இசின்பயேவா தங்கப்பதக்கம் வென்றார். இவர் 4.91 மீற்றர் உயரத்தைத் தாண்டி புதிய உலக சாதனை படைத்தார்.

# தேசியக் கொடியை ஏந்திய அஞ்சு எதென்ஸில் பறக்க விடுவாரா?

எதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவுக்கு இரண்டாவது பதக்கத்தைப் பெற்றுத் தரக்கூடியவர் என்ற நம்பிக்கையுள்ள தடகள வீராங்கனை அஞ்சு பாபி ஜார்ஜ் பதக்கம் வெல்வாரா? 27 வயதாகும் அஞ்சு பாபி ஜார்ஜ் கடந்த ஆண்டு பரிஸில் நடைபெற்ற உலகப் போட்டியில் 6.70 மீற்றர் தூரம் நீளம் தாண்டி வெண்கலப்பதக்கம் வென்றார்.

தற்போது எதென்ஸில் 40 பேர் நீளம் தாண்டுதலில் பங்கேற்கின்றனர். இதில் 7 பேர் 7 மீற்றர் தொலைவைத் தாண்டியுள்ளனர். 6 பேர் 6.74 மீற்றர் தூரத்தைத் தாண்டியுள்ளனர்.

# கிரீஸ் வீரர் பதக்கம் பறிப்பு விசாரணை தொடங்கியது

நான் குற்றமற்றவன் உண்மை நிலை என்னவென்று எனது வழக்கறிஞர் சம்மேளனம் விரைவில் வெளிச்சத்திற்கு கொண்டுவரும் என கிரீஸ் பளுதூக்குதல் வீரர் லியோனிதாஸ் சம்பானிஸ் கூறியுள்ளார் எதென்ஸ் ஒலிம்பிக்கில் 62 கிலோ எடைப் பிரிவுக்கான பளுதூக்குதலில் வெண்கலப்பதக்கம் வென்றவர் சம்பானிஸ். ஆனால் அதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் அவர் தடை செய்யப்பட்ட 'டெஸ்டோடிரோன்' ஊக்கமருந்தை உட்கொண்டுள்ளது தெரிய வந்தது. இதையடுத்து. அவரது பதக்கம் பறிக்கப்பட்டது எதென்ஸ் ஒலிம்பிக்கில் பதக்கம் பறிக்கப்பட்ட முதல் வீரரான சம்பானிஸ், 1996, 2000 ஒலிம்பிக் போட்டிகளில் வெள்ளிப் பதக்கம் வென்றவர்.




# 3ஆவது போட்டியிலும் தென்னாபிரிக்கா தோல்வி ஒருநாள் தொடரும் சிறிலங்கா வசமானது!



சிறிலங்கா தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான மூன்றாவது ஒருநாள் போட்டியிலும் சிறிலங்கா வெற்றிபெற்றுள்ளது.

நேற்று தம்புள்ள ரிங்கிரி மைதானத்தில் நடைபெற்ற பகல் இரவு போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 191 ஓட்டங்களைப் பெற்றனர்.

துடுப்பாட்டத்தில் கலிஸ்52, கீப்ஸ் 49 ஓட்டங்களை முறையே பெற்றனர். பந்துவீச்சில் டில்சான் ரங்கணஹேரத் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு வெற்றி இலக்கை நோக்கி ஆடிய சிறிலங்கா 47.4 ஓவரில் வெற்றி இலக்கை அடைந் தது

துடுப்பாட்டத்தில் அத்தப்பத்து ஆட்டமிழக்காது 98 ஓட்டங்களையும், ஜெயவர்த்தன 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் குளூஸ்னர் 2 விக்கெடுக்களைக் கைப்பற்றினர். ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 3-0என்ற நிலையில் வென்றதன் மூலம் சிறிலங்கா ஒருநாள் தொடரையும் தனதாக்கியது.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக அத்தப்பத்து தெரிவானார்.

# முத்தரப்புப் போட்டி மழையால் பாதிப்பு இறுதிப்போட்டியில் பாகிஸ்தான்-அவுஸ்.

முத்தரப்பு கிரிக்கெட் போட்டியில் நேற்று அவுஸ்திரேலிய பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான போட்டியும் மழையால் கைவிடப்பட்டது. நேற்று முன்தினமிரவு பெய்த மழை இன்னும் தொடர்ந்து பெய்வதால், மைதானம் முழுவதும் குளம் போல் தண்ணீர் தேங்கி நிற்பதாகவும், இதையடுத்து நேற்றும் ஆட்டம் இரத்து செய்யப்பட்டது. அதன்படி பாகிஸ்தான் 9 புள்ளியுடனும், அவுஸ்திரேலியா 6 புள்ளியுடனும், இந்தியா 3 புள்ளியுடனும் உள்ளன. இதையடுத்து, வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ள இறுதிப்போட்டியில் அவுஸ்திரேலியாவும், பாகிஸ்தானும் மோதும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



# விளையாட்டு


## தன்ராஜ்பிள்ளை ஓய்வுபெறுவர்

எதென்ஸ்ஒலிம்பிக் போட்டிக்குப் பின்னர் இந்திய ஹொக்கி வீரர் தன்ராஜ்பிள்ளை ஓய்வுபெறுவார் என இந்திய அணியின் பயிற்சியாளர் கூறியுள்ளார்.

ஒலிம்பிக் போட்டியில் இந்தியா பதக்கம் வெல்லும் என்று எதிர்பார்க்கப்பட்ட போட்டிகளில் ஆண்கள் ஹொக்கியும் ஒன்றாகும்.

எதிர்பார்ப்புக்கு மாறாக இந்திய அணியினரின் மோசமான ஆட்டத்தால் ஹொக்கியில் பதக்கக் கனவு பறிபோனது. ஐந்து ஆட்டத்தில் இதுவரை ஆடியுள்ள இந்திய அணி தென்னாபிரிக்காவுக்கு எதிராக மட்டுமே வெற்றி பெற்றுள்ளது.பதக்கம் கிடைக்கவில்லையே என ரசிகர்கள் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் ஒலிம்பிக் போடடிக்குப் பின்னர் முன்னணி ஆட்டக்காரர்களில் ஒருவரான தன்ராஜ் பிள்ளை ஓய்வு பெறுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## சிந்தனைக்கு



இராணுவ ஆதிக்கத்திற்கும், அழுத்தத்திற்கும் புலிகள் இயக்கம் என்றுமே விட்டுக்கொடுத்ததில்லை; கொண்ட கொள்கையில் நாம் என்றுமே வளைந்து கொடுத்ததில்லை.

தமிழீழதேசியத்தலைவர்.


ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை, கிளிநொச்சி. 26-08-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல்
Daily@ eezhanatham .com
natham 2 3ela @Yanoo.com


## மீண்டும் பழைய பல்லவி!

சிறிலங்கா ஆட்சியாளர் எப்பொழுதுமே தமிழ் மக்கள் மீது ஏதோ ஒரு வகையில் அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் என்பதிலேயே குறிக்கோளாகவுள்ளனர். இனப்பிரச்சினைக்கு நீதியான நியாயமான தீர்வொன்றைக் காண்பதில் அவர்கள் அக்கறை கொண்டவர்களாக இருந்ததில்லை.

அதாவது இராணுவ ரீதியில் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தினை நசுக்க முயன்ற சிங்கள அரசு இந்நடவடிக்கைக்கு சர்வதேச ரீதியான உதவியை நாடிநின்றனர். இராணுவப் பயிற்சிகள், ஆயுததளபாடங்கள், ஆலோசனைகள் என்பவற்றை சர்வதேச நாடுகளிடம் இருந்து பெற்றுக்கொள்ள முற்பட்டனர், பெற்றுக் கொண்டும் வந்தனர்.

மறுபுறத்தில் விடுதலைப்புலிகள் இயக்கத்தை சர்வதேச நாடுகள் தடைசெய்வதற்கும், கட்டுப்பாடுகளை விதிப்பதற்கும் சிறிலங்கா அரசு பெரும் முயற்சி செய்தது. பொ.ஐ.முன்னணியின் ஆட்சிக்காலத்தில் அதன் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் முழு நேரப்பணியாகவும் இதுவே இருந்தது.

அதாவது ஆயுத ரீதியிலோ அன்றி இராஜதந்திர ரீதியிலோ விடுதலைப்புலிகள் மீது அழுத்தத்தைப் பிரயோகிப்பதன் மூலம் தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்தை வலுவிழக்கச்செய்வதே சிங்கள ஆட்சியாளர்களின் நோக்கமாக இருந்துவந்தது. நிபந்தனையற்ற அழுத்தங்களற்ற விதத்தில் பேச்சுக்களை ஆரம்பிக்க விடுதலைப்புலிகள் தயாராக இருந்தபோதும் அரசாங்கம்அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

ஆனால் யுத்தம் பெரும் தோல்விகளையும், இழப்புக்களையும் கொடுத்ததனால் யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கு தவிர்க்க முடியாது வந்த சிறிலங்கா அரசாங்கம் தற்பொழுது மீண்டும் விடுதலைப்புலிகள் மீது சர்வதேச சமூகம் அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் எனவும்,அதற்கு போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு சாதகமான அறிக்கைகளை விடவேண்டுமென கோரத் தொடங்கியுள்ளது.

கண்காணிப்புக்குழுத் தரப்பினர் குறிப்பிடுவது போன்று "கிழக்கிலுள்ள நிலமை அமைதி வழிமுறையைமேலே கொண்டு செல்ல உதவக்கூடிய நிலையிலில்லை" என்பது முற்றிலும் ஏற்புடையதொன்றே. ஏனெனில் இன்று கிழக்கில் யுத்த நிறுத்தம் நடைமுறையில் உள்ளதா என்று கேள்வி எழுப்பும் அளவிற்கு நிலமை மோசமாகியுள்ளது. நாளாந்தம் வன்முறைகள் இடம்பெற்ற வண்ணமுள்ளன.

ஆனால் இம் வன்முறைகளுக்கு யார் பொறுப்பு என்பது குறித்து கண்காணிப்புக் குழுவின் அறிக்கை ஒன்றைத் தயார் செய்யக்கூடிய நிலையில் இல்லையென்றே கூறவேண்டும். ஏனெனில் இவ் வன்முறைகள் தொடர்பாக அரசாங்கமும், விடுதலைப்புலிகள் இயக்கமும் பரஸ்பரக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றன. அவை குறித்து விசாரணை செய்து முடிவுகாணக்கூடியதான வாய்ப்புக்கள் மிகக் குறைவாகவே உள்ளன.

இதேவேளை இவ்வன்முறைகளுக்கு யார் பொறுப்பு என்பது குறித்து சிலவேளைகளில் ஊகங்களுக்கு வரக்கூடும். இதில் சிலசரியாகவும் இருக்கலாம். சில தவறாகவும் இருக்கலாம். ஆனால் இதனைக் கொண்டுஅறிக்கைகளைக் தயாரித்தல் என்பதும் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது என்பதும், ஏற்புடையதாக இருக்குமா என்பது சந்தேகமே.

அதிலும் சிறிலங்காவின் பாதுகாப்புச் செயலாளர் கோரியிருப்பது போன்று சர்வதேச அபிப்பிராயத்தைப் புலிகளுக்கு எதிராக உருவாக்கும் வகையில் கண்காணிப்புக் குழு அறிக்கை தயாரித்தல் என்பது பொருத்தப்பாடானதாக இருக்க மாட்டாது. ஏனெனில் இத்தகையதொரு அறிக்கை கண்காணிப்புக் குழுவினால் தயாரிக்கப்படுமேயானால் அது ஒரு தலைப்பட்சமானதாகவும், நடுநிலை தவறியதாகவுமே இருக்கமுடியும்.

இந்நிலையில், சிறிலங்காப் பாதுகாப்புச் செயலாளரின் இக் கோரிக்கையானது ஆட்சியாளர்கள் இன்னமும் தமது சிந்தனைப் போக்கை மாற்றிக்கொள்ளவில்லை என்பதையே வெளிப்படுத்துவதாகவுள்ளது. அதாவது விடுதலைப்புலிகள் மீது ஏதோ ஒரு வகையில் அழுத்தங்களை பிரயோகிப்பது என்பதே அதுவாகும்.

ஆனால் இது கடந்த கால அனுபவத்தை மறந்தமைக்கு ஒப்பான செயலாகும். அதாவது விடுதலைப்புலிகள் இயக்கம் அழுத்தங்களுக்கு என்றும் பணிந்துபோக மாட்டாது என்பது மட்டுமல்ல. நீதியற்ற எத்தகைய தீர்ப்பையும் அது ஏற்றுக் கொள்ள மாட்டாது என்பதனையும் சிறிலங்கா ஆட்சியாளர்கள் மறந்து போய் விட்டாதாக எண்ணவைக்கின்றது.

# யுத்தத்தைத் தொடங்கும் நோக்கம் அரசாங்கத்திற்கு இல்லையாம்

### சிறிலங்கா பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி

மீண்டும் யுத்தத்தைத் தொடங்கும் தேவையோ, நோக்கமோ அரசாங்கத்திற்கு இல்லையென பதில் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

போரைத்தூண்ட வேண்டாமென அவர் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கும், ஏனையோருக்கும் எச்சரித்துள்ளார். தற்போதைய சமாதானத்தை நிலையானதாக மாற்றுவதே அரசின் விருப்பமாகும். ஆயினும் நாட்டின் சட்டதிட்டங்களையும், போர்நிறுத்தங்களையும் மீறுவோருக்கும் எதிராக படையினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ரங்கல கடற்படை முகாமில் கடற்படைவீரர்கள் மத்தியில் உரையாற்றியவேளை அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

போர்நிறுத்த மீறல்கள் பற்றி பாராபட்சமற்ற முறையில் விசாரித்து மக்களுக்கு அறியத்தரும் பொறுப்பு கண்காணிப்புக் குழுவினரை சார்ந்ததென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# வரவு செலவுத் திட்டம் தயாரிக்க ஜே.வி.பி.தனியாகக் குழு அமைப்பு

### -நிதி அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்படுமாம்

வரவு செலவுத்திட்டத்தை தயாரிப்பதற்கென ஜே.வி.பி.யினர் புதிதாகக் குழு ஒன்றை அமைத்துள்ளனர். இக்குழுவினரால் தயாரிக்கப்படும் வரவு செலவுத் திட்டம் நிதி அமைச்சுக்கு கையளிக்கப்படும் எனவும், சிறுகைத்தொழில் கிராமிய அமைச்சர் சுனில் ஹந்துன்னெட்டி,ஜே.வி.பி. பல அமைச்சர்கள் மற்றும் பல்கலைக்கழக பேராசிரியர்கள் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர். இன்னும் இரண்டு வாரங்களில் வரவுசெலவுத்திட்ட நகல் நிதிஅமைச்சுக்கு கையளிக்கப்படும்.

### -ஹக்கீமினால் நீக்கப்பட்ட-

# மு.கா. பாராளுமன்ற உறுப்பினர்கள் மூவருக்கு பிரதி அமைச்சர் பதவி

இம்மாதம் 24ஆம் திகதி நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பின் படி முஸ்லிம் காங்கிரஸில் இருந்து இடை நிறுத்தப்பட்ட மூன்று பாராளுமன்றத் தேசியப்பட்டியல் அங்கத்தவரான உசன் பைலா, வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதுர்தீன், மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் நஜிம் எம்.எம்.மஜிட் ஆகியோர்கள் குற்றவாளிகள் அல்ல எனத் தீர்மானித்துள்ளது. இதன்பின் இவர்களுக்கு அரசாங்கம் மூன்று பிரதி அமைச்சர்கள் பதவிகளை வழங்குவதற்கு முன்வந்துள்ளது. இவர் அடுத்த வாரம் பாராளுமன்றத்தில் சனாதிபதி முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொள்வார்கள் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

# அண்மையில் சிறையிலிருந்து விடுதலையானோரே கொழும்பில் கொலைகளுக்குக் காரணம்

(கொழும்பு)

கொழும்பிலும் தெற்குப்புறத்திலும் இடம் பெற்ற பல கொலைகளுடன் அண்மையில் சிறையில் இருந்து விடுதலையானவர்களில் பலருக்கு தொடர்புள்ளதாக பொலிஸ்மா அதிபர் இந்திரா டீ சில்வா தெரிவித்துள்ளார்.பாதாள உலக கோஷ்டியினருக்கு இடையில் ஏற்பட்டுள்ள அதிகாரப் பிரச்சினையே இந்தக் கொலைகளுக்குக் காரணம் எனவும் அவர் கூறியுள்ளார்.இதேவேளை இதனைக் கட்டுப் படுத்துவதற்குத் தற்போது நடை முறையில் உள்ள பாதுகாப்புச் செயல் திட்டங்களை மேலும் விரிவுபடுத்த வேண்டு மெனவும் பொலிஸ்மா அதிபர் மேலும் கூறினார்.

### பட்டதாரிகளுக்கு பயிற்சி ஆரம்பம்

வவுனியா மாவட்டத்தில் இருந்து அரச சேவைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள 166 பட்டதாரிகளுக்கான முன் பயிற்சித்திட்ட அங்குராப்பணம் வரும் இரண்டாம் திகதி காலை 10 .00 மணிக்கு வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற விருப்பதாகவும் அன்றைய தினம் காலை 930 மணிக்கு தெரிவு செய்யப் பட்டுள்ள அனைவரையும் வருகை தருமாறு வவுனியா அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்துள்ளார். (21)

# சு.க.வின் வருடாந்த மாநாடு காலியில் நடத்த ஏற்பாடு

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் வருடாந்த மாநாடு எதிர்வரும் 4ஆம் திகதி காலியில் நடைபெற ஏற்பாடாகியுள்ளதாக கட்சியின் செயலாளரும் மகாவலி அபிவிருத்தி ரஜரட்ட, அபிவிருத்தி ஆற்றுச்சமவெளி அமைச்சருமான மைத்தியால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அன்றையதினம் சந்திரிகா ஐ.ம.சு.முண்ணனி அரசாங்கத்தின் கொள்கை திட்டமிடல் பற்றி விளக்கவுள்ளார். கட்சியின் முன்னேற்றம் கருதி நீண்டநாட்களாக கட்சிக்காக உழைத்தோருக்கு நினைவுச் சின்னம் அன்பளிப்புச் செய்யவுள்ளார். அத்துடன் 53ஆவது வருடத்தை நினைவு கூருமுகமாக பத்தரமுல்லையில் புதியகட்சி அலுவலகம் ஒன்று திறந்து வைக்கப்படும்

# ஐ.தே.க.மாகாணசபை உறுப்பினருக்கு விளக்க மறியல் நீடிப்பு

(கொழும்பு)

ஆட்கடத்தல் மற்றும் பாலியல் வல்லுறவுக் குற்றச்சாட்டு களுக்காக விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள ஐக்கிய தேசியக்கட்சியின் மேல்மாகாணசபை உறுப்பினர் துமிந்த சில்வாவின் விளக்க மறியல் நீடிக்கப்பட்டுள்ளது.சென்ற திங்கள் கொழும்பு பிரதமநீதியாளர் சரோஜினிகுசல வீரவர்த்தனவின் முன்னிலையில் சிறை அதிகாரிகளால் துமிந்த சில்வா ஆஜர்படுத்தப்பட்டபோதே நீதியாளர் இவரை வரும் செப்ரெம்பர் மாதம் 7ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தர விட்டுள்ளார்.

இதேவேளை பெலவத்தை பெரேரா மாவத்தையிலுள்ள துமிந்த சில்வாவின் இரண்டு அறைகளை சோதனையிட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினர் அவற்றில் இருந்து 34 வீடியோ நாடாக்கள் மற்றும் பல பொருட்களைக் கைப்பற்றினர்.

# நீர்கொழும்பு பிரதேசத்தில் குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

(கொழும்பு)

நீர்கொழும்பு பிரதேசத்தில் குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.


நேற்று நடந்த இந்தச்சம்பவத்தின் போது பலியானவர் முப்பத்தாறு வயதுடையவர் எனவும், இவர் இரண்டு பிள்ளைகளின் தந்தை எனவும் கூறப்பட்டுள்ளது.

கொலையைச் செய்தவர்கள் தானியங்கி கைத்துப்பாக்கி மூலம் இக் கொலையை மேற்கொண்டு விட்டு மோட்டார் சைக்கிலில் தப்பிச் சென்றுள்ளதாக பொலிசார் கூறியுள்ளார். இதேவேளை கடந்த வாரத்தினுள் நேற்று முன்தினமே அதிகளவான கொலைகள் அறிவிக்கப் பட்டுள்ளதாகவும், நான்கு வெவ்வேறு பிரதேசங்களில் நேற்று முன்தினம் மட்டும் ஐந்துபேர் கொல்லப்பட்டுள்ளதாக பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

# பண்டார வன்னியன் நினைவு நாள்

## கற்சிலை மடுவில் சிறப்புற அனுஷ்டிப்பு

வன்னிமண்ணின் இறுதி மன்னன் மாவீரன் பண்டாரவன்னியன் முல்லைத்தீவுத் தளத்தை வெள்ளையர்களிடமிருந்து வெற்றிகொண்ட வெற்றி நாளில் 201ஆம் ஆண்டு நிறைவு விழா நேற்று கற்சிலைமடுவில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பண்டார வன்னியனின் நினைவுக்கல் அமைந்த இடத்தில் அஞ்சலியுடன் ஆரம்பமாகி மாவீரன் பண்டார வன்னியனின் உருவப்படத்தினை தாங்கியவாறு மக்கள் அணிவகுத்து வர தமிழரின் பாரம்பரிய கலை



பண்பாடுகளைச் சித்திரிக்கின்ற கலைகளை வெளிப்படுத்தும் காவடி, கும்மி,குடமூதல், குதிரையாட்டம், கோலாட்டம், கரகாட்டம் எனப்பல கலை நிகழ்வுகளை நிகழ்த்தியவாறு கலைஞர்கள் அணிவகுத்து வந்தனர்.

பண்டார வன்னியனின் நினைவுக்கல் அமைந்த இடத்தில் மாலை 5.30 மணியளவில் ஆரம்பமான இப்பேரணி கற்சிலைமடு சந்தியில் பண்டாரவன்னியனின் சிலை அமர்ந்த இடம் நோக்கி நகர்ந்து அங்கு ஒழுங்குமைக்கப்பட்டிருந்த அரங்கவளாகத்தை வந்தடைந்தது.

வளாகத்தில் நடைபெற்ற நிகழ்வுகளுக்கு வருகைதந்தவர்களை வரவேற்கும் நோக்குடன் வரவேற்புச் சுடரினை ஒட்டுசுட்டான் பிரதேச உதவி அரச அதிபரும் கற்சிலைமடு கிராம அலுவலரும் ஏற்றிவைக்க, பொதுச் சுடரினை தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் அவர்கள் ஏற்றிவைத்தார். தொடர்ந்து தமிழீழத் தேசியக்கொடியினை முல்லை. மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் அவர்கள் ஏற்றிவைக்க, பண்டாரவன்னியனின் வாள்க்கொடியினை பண்டாரவன்னியன் அறங்காவல்சபைத் தலைவரும் முல்லை. மாவட்ட அரச அதிபருமான இமல்டா சுகுமார் அவர்கள் ஏற்றிவைத்தார். பண்டாரவன்னியனின் உருவச் சிலைக்கான சுடரினை பண்ராட வன்னியனின் வரலாற்றை எழுதி வரும் அருணா, செல்லத்துரையும் முதல் சுடரினை பல முக்கியஸ்தர்களும் ஏற்றிவைத்தனர். தொடர்ந்து பண்டாரவன்னியனின் சிலைக்கு வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம் அவர்கள் மாலை அணிவிக்க தொடர்ந்து பல முக்கிய பிரமுகர்களும் மலர்மாலை அணிவித்தனர்.

அத்தோடு ஆரம்பமான அரங்க நிகழ்விற்கு முல்லைத்தீவு அரசாங்க அதிபரின் தலைமையில் ஆரம்பமான இவ் அரங்க நிகழ்வில் கலை நிகழ்வுகள் நடைபெற்றன. அடுத்து வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம் அவர்கள் சிறப்புரையினை தொடர்ந்து பண்டாரவன்னியனின் வரலாற்றினை எழுதிய அருணா செல்லத்துரை அவர்களுக்கு வன்னி பாராளுமன்ற உறுப்பினர் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

முல்லை. மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் முகுந்தன், தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் ஆகியோரும் உரைகளை நிகழ்த்தினர். தொடர்ந்து பல கலைநிகழ்வுகளும் இடம் பெற்றது. இந்நிகழ்வில் பெரும் திரளாக பொதுமக்கள், போராளிகள், அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (சதீ

## எதென்ஸ் ஒலிம்பிக் -2004 பதக்கப்பட்டியல்

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐக்கிய அமெரிக்கா | 25 | 28 | 22 | 75 |
| ரஷ்யா | 13 | 19 | 21 | 53 |
| சீனா | 24 | 16 | 12 | 52 |
| அவுஸ்திரேலியா | 16 | 10 | 15 | 41 |
| ஜப்பான் | 15 | 09 | 10 | 34 |
| ஜேர்மனி | 09 | 11 | 13 | 33 |
| பிரான்ஸ் | 10 | 07 | 09 | 26 |
| பிரிட்டன் | 07 | 08 | 09 | 24 |
| இத்தாலி | 08 | 06 | 08 | 22 |
| தென்கொரியா | 06 | 10 | 05 | 21 |
| நெதர்லாந்து | 04 | 07 | 08 | 19 |
| உக்ரேன் | 08 | 03 | 06 | 17 |
| ருமேனியா | 08 | 04 | 04 | 16 |
| ஸ்பெயின் | 01 | 08 | 04 | 13 |
| பெலாரஸ் | 02 | 03 | 07 | 12 |
| கிரீஸ் | 05 | 03 | 03 | 11 |
| ஹங்கேரி | 04 | 06 | 01 | 11 |
| பல்கேரியா | 02 | 01 | 06 | 09 |
| போலந்து | 02 | 02 | 04 | 08 |
| கியூபா | 01 | 01 | 06 | 08 |
| கனடா | 02 | 04 | 01 | 07 |

### யாழ்...

அமுற்படுத்தப்பட்டுள்ளது. இதனிடையே யாழ். செயலகத்திற்கு விஜயம் செய்த ஜேம்ஸ் என்ட் வில்ஸ் அரச அதிபர் செபத்நாதனையும் மற்றும் செயலக உயரதிகாரிகளையும் நண்பகல் சந்தித்துப்பேச்சுக்களை நடாத்தினார். யு.எஸ்.எயிட் அமைப்பினால் குடாநாட்டினில் அமுற்படுத்தப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும், எதிர்காலத்தில் அமுற்படுத்தப்படவேண்டிய திட்டங்களை அடையாளம் காண்பது தொடர்பாகவும், எதிர்காலத்தினில் அமுற்படுத்தப்பட வேண்டிய உதவித்திட்டங்களை அடையாளங் காண்பது தொடர்பாக இச்சந்திப்பில் ஆராயப்பட்டதாக தெரியவருகின்றது. (27)

### நோர்வே...

அலுவலகத்திற்கு விஜயம் செய்து பேச்சுக்களை நடத்தினார் யாழ். மாவட்ட அரசசார்பற்ற அமைப்புகளின் இணையத் தலைவர் வி.ஸ்ரீசக்திவேல் தலைமையிலான பிரதிநிதிகளுடன் இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இச்சந்திப்பின்போது இலங்கை அரசு சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் காட்டி வரும் அசிரத்தையான போக்குத் தொடர்பாக இணையப்பிரதிநிதிகள் கருத்துக்களை முன்வைத்தனர் கருணா விடயத்துடன் தமக்கு எந்தவிதமான தொடர்பும் இதுவரை இருந்திருக்கவில்லை.

### மட்டு...

உறுப்பினர் தங்கேஸ்வரி கதிர்காமரிடம் நேரடியாகக் கடிதங்களை ஒப்ப டைத்தனர்.

அவர்களால் கையளிக்கப்பட்ட இந்தக் கடிதத்தில் அண்மையில் பொலநறுவை மாவட்டம் கிங்கிராங் கொடையில் கருணாவின் சகாக்கள் எனக் கூறப்படும் பதின்னான்கு பேர் ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டு இருபத்து நான்கு மணிநேரத்திற்குள் பிணையில் விடுவிக்கப்பட்டமையும்

இதே போன்று தேர்தல் காலத்தில் ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்ட முஸ்லிம் அரசியல் கட்சியின் ஆதரவாளர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டமையும் தமது கடிதத்தில் சுட்டிக்காட்டி உள்ளனர். இதே வேளை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்ட அரசாங்கப் படையினர் நல்லெண்ண அடிப்படையில் விடுவிக்கப்பட்டமையும் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டி உள்ளனர்.

### புலிகள்...

வாக விளக்கியிருக்கின்றோம்.

**கேள்வி:- சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தமது படைகள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்து தாக்குதல்கள் நடத்துவதற்கு அனுமதி வழங்கியதாகக் கூறப்படுகின்றது. இது தொடர்பாக உங்கள் நிலைப்பாடு யாது?**

பதில்:- எங்களைப் பொறுத்தவரையில் யுத்தநிறுத்த உடன்பாடு நடைமுறையில் உள்ளது. இந்த யுத்த நிறுத்த உடன்பாட்டை மீறித்தான் அப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். அந்த கணத்திலிருந்தே இந்த யுத்த நிறுத்த உடன்படிக்கை இல்லாமல் போகும். சனாதிபதி கூறியதாக வெளியாகியுள்ள தகவல்களை வைத்துக் கொண்டு நாங்கள் எது அதிகாரபூர்வமான கருத்து, எது அதிகார பூர்வமற்ற கருத்து என்பதை அறியாமல் கருத்துக்களை வெளியிடுவது பொருத்தமில்லை. ஆனால் நாளுக்கு நாள் அவர்களின் குழப்பமான கருத்துக்கள் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

எங்களைப் பொறுத்தவரையில் யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுத் தலைவர் என்ற வகையிலும், அனுசரணையாளர்கள் என்ற வகையிலும் அவர்கள் தருகின்ற உத்தரவாதங்களின் அடிப்படையில் தற்பொழுதும் அவர்கள் யுத்த நிறுத்த உடன்பாட்டை நடைமுறைப்படுத்திக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

**கேள்வி:- முல்லைத்தீவு சம்பவம்பற்றி இன்று நீங்கள் என்ன விளக்கம் கொடுத்திருக்கின்றீர்கள்?**

பதில்:- இன்றைக்கு எங்களுடைய கடற்புலிகளின் தளபதியும் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தார். அவரும் நிலைமைகளைத் தெளிவாக விளக்கி இருக்கின்றார். நாங்கள் எங்களுடைய கடற்பிரதேசத்திற்குள் எங்களுடைய கடற்புலிகளுடைய கலங்களுடைய நடமாட்டங்கள், பயிற்சிகள் தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அவற்றை வைத்துக்கொண்டு யுத்த நிறுத்த மீறல், அல்லது கடற்புலிகள் மீது தவறான குற்றச்சாட்டுக்களை சுமத்துவது பொருத்தமற்றது.

அதாவது இரண்டு தரப்பும் மோதல் நிலைக்கு வந்து யுத்த நிறுத்த மீறல் நடைபெறுகின்ற பொழுதுதான் கண்காணிப்புக்குழு வந்து அதனை விசாரித்து உண்மைகளை அறியலாம், தவறான தேவையற்ற குற்றச்சாட்டுக்களைச் சுமத்த கண்காணிப்புக்குழுவை இக்கட்டான நிலைக்குள் சிக்க வைப்பதை அவர்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்பதை இன்று எங்களுடைய கடற்புலிகளின் தளபதி தெளிவாக விளக்கியிருக்கின்றார்.

**கேள்வி:- முல்லைத்தீவு சம்பவத்தில் விடுதலைப் புலிகள் ஆயுதம் கொண்டு வந்ததாக குற்றம் சாட்டப்படுகின்றது. அதற்கு என்ன பதிலை தெரிவித்துள்ளீர்கள்?**

பதில்:- இலங்கை கடற்படையும் இலங்கை படைத்தரப்பும் ஆயுதங்களைக் குவித்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆகையால் புலிகள் ஆயுதங்களை கொண்டு வருவதோ அல்லது ஆயுதங்களைப் பெற்று பலப்படுத்துவதோ என்பது யுத்த நிறுத்தமீறல் அல்ல. ஆனால் எங்களைப் பொறுத்தவரையில் அவர்களுடைய குற்றச்சாட்டு அர்த்தமற்றது. அப்படியொரு குற்றச்சாட்டாக இருந்தாலும் அது யுத்த நிறுத்தமீறல் அல்ல. விடு லைப் புலிகள் ஆயுதங்களைப் பெற்றுக் கொள்வதோ, ஆயுத ரீதியாக தங்களைப் பலப்படுத்திக் கொள்வதோ யுத்த நிறுத்த உடன்படிக்கையில் தவிர்க்கப்பட்ட ஒன்றாக இல்லை அதுதான் யதார்த்தம்.

அதேவேளை அவர்கள் கூறிய குற்றச்சாட்டிற்கும், அந்த சம்பவத்திற்கும், சம்பந்தமில்லை.

**கேள்வி:- கிழக்கு சம்பவம் தொடர்பாக நீங்கள் ஏற்கனவே போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கு கடிதம் அனுப்பியிருந்தீர்கள் இன்று அது சம்பந்தமாக என்ன தீர்மானம் எடுக்கப்பட்டது. அது சம்பந்தமாக அரசாங்கத்திடமிருந்து உங்களுக்கு என்ன பதில் கிடைக்கப்பெற்றது?**

பதில்:- அரசாங்கத்திடமிருந்து எந்த உத்தரவாதங்களும், பதில்களும் கிடைக்கவில்லை ஏற்கனவே நாங்கள் கடிதமூலம் எமது ஆட்சேபத்தைக் கூறியிருப்பினும் எங்களது தலைமைப்பீடத்தின் கரிசனையினை இன்றும் நேரடியாக வலியுறுத்தியிருக்கின்றோம். இந்த யுத்த நிறுத்த உடன்படிக்கையிலுள்ள சரத்துக்களின் அடிப்படையில் வடக்கு கிழக்கில் ஆயுதக் குழுக்கள் செயற்படுவதைத் தடைசெய்யப்பட வேண்டும் வடக்குக்கிழக்கிலிருந்து வெளியேற்றப்பட வேண்டும் என்பது இந்த யுத்த நிறுத்த உடன்படிக்கையில் இரண்டு தரப்பும் ஏற்றுக் கொண்ட ஒரு நடைமுறை, தற்பொழுது மட்டக்களப்பு மாவட்டத்திலே கருணா குழு ஈ.பி.டி.பி தேசவிரோதக்குழு ஆகியவை படைத்தரப்புடன் சேர்த்து மீண்டும் இயங்க அனுமதித்திருப்பது இந்த யுத்த நிறுத்த சூழலை நாங்கள் தொடர்ந்து கடைப்பிடிப்பதற்கு பாரிய அச்சுறுதலாகவுள்ளது என்பதை தொடர்சியாக வலியுறுத்தி வருகின்றோம் இன்றும் எங்களுடைய தலைமைப் பீடத்தின் அந்தக்கரிசனையை நேரடியாகவும் அவர்களுக்கு வலியுறுத்தியிருக்கின்றோம்

**கேள்வி:- அரசாங்கத் தரப்பிலிருந்து கிழக்குப் பகுதிகளில் நடைபெறுகின்ற படுகொலைகள் தொடர்பாக விடுதலைப்புலிகள் மீது குற்றம் சாட்டப்பட்டு வருகின்றது. இது பற்றி நீங்கள் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் ஆட்சேபம் ஏதும் தெரிவித்தீர்களா?**

பதில்:- அண்மைக்கால நிகழ்வுகள் குறித்து உங்களுக்குத் தெரியும் கருணா குழுவும், ஈ.பி.டி.பி குழுவுக்கும் ஏற்பட்ட ஒரு நெருக்கம் இந்த யுத்த நிறுத்த செயற்பாடுகளை சீர்குலைவிற்கு உள்ளாக்குவதற்கு அவர்களைத் தொடர்ந்து செயற்பட வைத்துள்ளது.

கருணா குழுவோடு தப்பிச் சென்ற ஒரு சிலரும், ஈ.பி.டி.பியும் சேர்ந்து கொழும்பிலே செயற்பட்டு கொண்டிருந்தமையும் அங்கு அவர்களுக்குள்ளே உள்முரண்பாடு ஏற்பட்டு கருத்து மோதல் ஏற்பட்டு தங்களுக்குள் தாங்களே சண்டையிட்டு, தாக்கப்பட்டு கொலைகள், படுகாயங்கள் ஏற்பட்டமையும், இதனால் அதிலிருந்து தப்பிவந்து எங்களிடம் சரணடைந்தவர்கள் பலரும் இருக்கிறார்கள்.

அவர்களுடைய தகவலின்படி அவர்களுக்குள்ளே இப்போதும் பிளவுகளும், பிரச்சினைகளும் உக்கிரமடைந்திருக்கின்றது. அதனுடைய விளைவாகத்தான் அண்மைக்காலத்தில் நிகழும் கொலைகள் என நாங்களும் சந்தேகிக்கின்றோம். இதில் புலிகளைக் குற்றம் சுமத்துவது எந்த விதத்திலும் அர்த்தமில்லாத ஒரு விடயம்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவரும் குழுவினரும் நேற்று கிளிநொச்சிக்கு வருகை மேற்கொண்டு அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்களுடன் கலந்துரையாடினர்.

விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் நேற்றுக் காலை 10.45 முதல் பகல் 11.45 வரை மேற்படி கலந்துரையாடல் நடைபெற்றது.

விடுதலைப்புலிகள் தரப்பில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை, விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலக பணிப்பாளர் நாயகம் புலித்தேவன், கடற்புலிகளின் தளபதி செழியன், ஜோர்ஜ் ஆகியோரும் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தரப்பில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் றொன் புறூவ் ஹொவ்டே, ஜோன் ஒஸ்கார் சோல்னெஸ், ரினாறூர்மி மாகி, எரிக் வெரிலன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

முன்னதாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவரும் குழுவினரும் காலை சிறிலங்கா உலங்கு வானூர்தி மூலம் கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் வந்திறங்கினர்.

மேற்படி குழுவினரை விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் நாயகம் புலித்தேவன் வரவேற்று சமாதானச் செயலகத்திற்கு அழைத்துச்சென்றமை குறிப்பிடத்தக்கது. (சோ,கு)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 26ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.